# நான் மோசேயோடு இருந்ததைப் போல

## AS I WAS WITH MOSES

## 51-05-03

WORD OF LIFE MINISTRY

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# நான் மோசேயோடு இருந்ததைப் போல

## AS I WAS WITH MOSES

## 51-05-03

நன்றி சகோதரரே.... தாமதத்திற்கு வருந்துகிறேன். மாலை வணக்கம் நண்பர்களே. இன்றிரவு தாமதமாக வந்ததற்காக மிகவும் வருந்துகிறேன். நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். எப்படியோ அதிலேயே இருந்து விட்டேன். அதிலிருந்து வர முடியாததைப் போல தோன்றியது. நான் தற்செயலாக மேலே பார்த்து, "ஓ நான்" என்றேன்.

மேலும் என்னுடைய சிறிய பையன் தெருக்களில் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தான்.

"அப்பா நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்?" என்றான். எனக்கு ஏதோ நிகழ்ந்து விட்டதாக அவன் நினைத்து விட்டான்.

ஆனால், இந்த ஜனங்களுக்கு முன்பாக ஒரு ஊழியக் காரனாக இன்றிரவு மீண்டும் இங்கே இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே நேராக ஜெப வரிசையை அமைக்க விரும்புகிறேன்.

2. தேவன் இன்று ஏதோ சில ஆழமான காரியங்களை என்னோடு பகிர்ந்து கொள்வதைப் போல இருந்தது. நான் எப்பொழுதுமே ஜனங்களுக்காக ஜெபம் செய்யக்கூடிய ஒரு இடத்தை விரும்புவது உண்டு. தேவனை ஏற்றுக் கொண்டு ஜனங்களை விசுவாசிக்கச் செய்வது என்பது எப்பொழுதுமே என்னுடைய கூட்டங்களில் ஒரு குறையாகவே இருந்து வருகிறது.

யாரோ ஒரு சகோதரனுடைய கை செயலிழந்து போயிருந்தது, அது அவருக்கு நேராக்கப்பட்டதை நான் இன்று புரிந்து கொண்டேன். கை செயலிழந்த ஒரு மனிதன் அங்கே இருந்து கொண்டிருந்தார்.

அங்கே தானே இப்பொழுது தன்னுடைய கையை வீசிக் கொண்டு அவர் தன்னுடைய சாட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அது அருமையாக இருக்கிறது. அந்த செயலிழந்துப் போன கரமானது அசைந்து கொண்டிருக்கிறது. அது தான் அந்த வழியாக இருக்கிறது. அதுவே என்னுடைய கூட்டங்களின் நோக்கமாக இருக்கிறது. பார்த்தீர்களா? நான்.....

இது சுய பெருமைக்காக அல்ல. இதில் நான் செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை. இப்பொழுது, உங்கள் மத்தியில் இருக்கும் அந்த ஒருவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த முயற்சிக்கிறேன் (பார்த்தீர்களா?) அந்த சுகமாகுதலை அங்கே செய்வதற்காக மட்டுமே அதில் நான் செய்ய வேண்டிய ஏதோ தனிப்பட்ட காரியம் என்று ஒன்றுமே இல்லை. அது அவராக இருக்கிறது. நீங்கள் எங்கே இப்பொழுது அமர்ந்து கொண்டிருக்கிறீர்களோ அவர் சரியாக உங்கள் பக்கத்தில் இருக்கிறார். அது அவருக்குள் இருக்கிற நம்பிக்கையாக இருக்கிறது.

ஆனால் ஜனங்களிடம் அதை உண்மையாக நம்ப வைப்பது மிகவும் கடினமாக உள்ளது. மேடைக்கு ஒருவர் வருவதை அவர்கள் பார்க்கிறார்கள். மேலும் ஊழியம் செய்யப்பட்டு அவருடைய விசுவாசத்தினால் சரியாக கட்டப் பட்டு அவர் குணமாக்கப்படுவதை பார்த்தும் கூட அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை அவ்வளவு தான். அதைச் செய்ய அவர்களுக்கு கடினமாக இருக்கிறது.

3. மேலும் இன்று ஜெபம் செய்வதை குறித்து நான் வியந்து கொண்டிருந்தேன். நேற்று மாலையில் யாரோ ஒருவர், இப்படியாக என்னிடம் கூறினார்.

"நான் ஐந்து பேருக்காக ஜெபம் செய்து கொண்டிருந்த போது அந்த மற்றொரு சகோதரன் ஐநூறு பேருக்காக ஜெபித்தார்" என்று கூறினார். நல்லது அது சரியாக இருக்கலாம். ஒருவேளை அந்த சகோதரன் அந்த வழியில் அப்படிச் செய்வதை கர்த்தர் விரும்புவதாக இருக்கலாம்.

எப்பொழுதுமே ஜனங்களுடன் தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொள்வதற்குப் பதிலாக அவர்களை இயேசுவுடன் தொடர்பு கொள்ளச் செய்வதுதான் சரியான வழி என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் நான் உங்கள் சகோதரன் மட்டுமே. உங்களுக்கு உதவக் கூடிய எந்த ஒன்றும் என்னிடத்தில் இல்லை. அது அவர் மட்டுமே. இங்கே இந்த அறையில் காற்று இருந்து கொண்டிருக்கிறதைப் போலவே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு மேலாக எல்லா இடங்களிலும் இருந்து கொண்டிருக்கிறார்.

4. இப்பொழுது நான் கூறியவைகள் அனைத்தும் சத்தியம் என்பதை தேவன் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார் அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

பக்கவாத்தால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரன் நேற்றைய கூட்டத்தில் இருந்து கொண்டிருந்தார், இன்று அவர் நல்ல சுகத்துடன் இருக்கிறார். நான் ஒருபோதும் அவரைத் தொட வில்லை, அல்லது ஒன்றுமே செய்யவில்லை. அவர் இங்கே மேடையை நோக்கி, பரிசுத்த ஆவியானவர் அங்கே அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்து கொண்டி ருப்பதைப் பார்த்தார். அவர் "ஏன் பரிசுத்த ஆவியானவர், என்னையும் கூட சுகப்படுத்தக்கூடாது அதில் சந்தேகம் இல்லை. ஆகவே நான் உம்மை ஏற்றுக் கொள்வேன்" என்று

அவருடைய இருதயத்தில் மட்டுமே கூறினார். அது அப்படியே நிகழ்ந்தது.

அறுபத்தாறு வருடங்களாக கால்கள் முடமாகிப்போன காங்கிரஸ்காரர் சகோதரர் உப்ஷா அவர்கள் இங்கே இருக்கிறார். நான் எந்த விதத்திலும் அவரை தொடவும் கூட இல்லை. நான் இங்கே வெறுமனே நின்று கொண்டிருந்தேன். அந்த மனிதரைக் குறித்து ஒரு தரிசனத்தைப் பார்த்தேன். அது உண்மை. ஆகவே நான் கூறியதை அவர் ஏற்றுக் கொள்ள மட்டுமே செய்தார். அவ்வளவு தான் அங்கே அவர் இருந்து கொண்டிருக்கிறார்: அவர் நடந்து கொண்டிருக்கிறார். பார்த்தீர்களா? நான் அதனுடன் செய்வதற்கு எந்த ஒன்றும் இல்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் அவர் வைத்திருந்த விசுவாசமானது அவரை முற்றிலும் சரியாக்கியது பார்த்தீர்களா?

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்து" மேலும் விசுவாசம் வந்து பொழுது, அவர் பயப்படவில்லை, அதன்மேல் கிரியை வைத்தார். "கிரியைகள் இல்லாத விசுவாசம் மரித்துப் போனதாக இருக்கிறது" பாருங்கள்?

5. அவர்களில் சிலர் "நல்லது, சகோதரர் பிரன்காம் அவர்களே நிறைய ஜனங்கள் வருகிறார்கள், இருப்பினும் நீங்கள் அவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். என்று அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருடனும் நீங்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள வேண்டாம். அவர்களுக்காக நீங்கள் ஜெபம் செய்தால் மட்டும் போதும், நீங்கள் செய்ய வேண்டியது அவர்களுக்காக ஜெபிப்பது மட்டுமே" என்று கூறினார்கள்.

சரி, நான்- என்னால் முடியும்....நான் அதைச் செய்ய முடியும். உங்கள் விசுவாசமானது எதை நோக்கிப் பார்க்கிறதோ அதையே கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் வரை நான்

செய்வேன் என்றேன். ஒரு நேரத்தில், அது ஜனங்களை வித்தியாசமாக செய்கிறது. நான் அவனுக்கு சத்தியத்தை மட்டுமே கூறினேன், அந்த மனிதன் அதை ஏற்றுக் கொண்டதால் செயல் இழந்த அந்த கரமானது குணமாகியது.

6. ஜனங்கள் இதைப் பார்த்து நம்பிக்கை வைப்பார்கள் என்றால் நான் எந்த ஒன்றையும் வேண்டுமென்றே தவறாக கூறமாட்டேன். தேவன் என்னுடைய இதயத்தை அறிவார். ஆகவே நான் செய்வதற்கு அதில் ஒன்றுமே இல்லை. ஏனென்றால் நான் அதற்கு பதில் கூற வேண்டும். மேலும் நான் உங்களுடன் உண்மையாகவும், நேர்மையாகவுமே இருப்பேன்.

ஆகையால் இயேசு உங்கள் ஒவ்வொருவரையும் குணப்படுத்தி விட்டார் என்று நான் கூறும் போது, அவர் கல்வாரியில் மரித்த போதே ஒவ்வொருவரையும் குணப்படுத்தி விட்டார். அவர் அங்கேயே பரிகாரம் செய்து விட்டார். உங்களுடைய பாவம், மற்றும் நோய்களுக்கான அனைத்துத் தன்மைகளுக்குமான கடன் செலுத்தப்பட்டுவிட்டது.

வியாதிக்கு காரணம் பாவம். நாம் பாவம் எதையும் செய்வதற்கு முன்பு நமக்கு எந்த ஒரு வியாதியும் இல்லை. இப்பொழுது வியாதி என்பது பாவத்தில் வீழ்ந்த பிறகு நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஏற்படுகிறது. நீங்கள் எந்த ஒரு பாவமும் செய்யாமல் ஒருவேளை இருக்கலாம். உங்கள் பெற்றோர் ஏதோ ஒரு காரியத்தை செய்திருந்தால் அவர்களுடைய பலவீனங்களால், இது போன்ற மற்ற காரியங்களால் நீங்கள் அந்த மரபுரிமையை பெற்றிருக்கலாம்.

உதாரணமாக, என் தந்தை ஒரு குடிப்பவர், பயங்கரமான ஒரு குடிகாரர். நல்லது, நானும் ஒரு குடிகாரனாக இருந்திருப்பேன், ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்னை அதிலிருந்து சுத்திகரித்தது. பார்த்தீர்களா? நான் என்

வாழ்க்கையில் ஒரு போதும் குடித்ததில்லை, விருப்பம் கொள்வதுமில்லை. ஆனால் என்னுடைய ஜனங்கள் அனைவருமே அவர்களில் பெரும்பாலானோர் புகையிலை மெல்லு பவர்களாகவும், புகைபிடிப்பவர்களுமாக இருந்தனர். ஏன் நான் இயற்கையாகவே....

ஒரு சோள தானியத்தைப் போல, அது மஞ்சள் நிற சோள தானியமாக இருந்தால் அது மாற்றம் செய்யப்படாமல் இருக்குமானால் அது மஞ்சள் நிறம் கொண்ட அதே தானியமாகவே இருக்கும். நல்லது, நான் என் வாழ்க்கையில் ஒரு போதும் புகை பிடித்ததில்லை, அதற்காக ஒரு போதும் ஏங்கினதும் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அதைச் செய்தது பார்த்தீர்களா? பார்த்தீர்களா?

7. இப்பொழுதும் கூட அதே காரியம்தான் இருந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய ஜனங்களிடம் இருந்து தலைமுறை தலைமுறையாக பெற்றுக் கொண்ட அந்த வியாதியால் உங்களுக்குள் ஒரு உள்ளான பலவீனமும், புத்திசாலித்தனமும், அது ஒவ்வொன்றும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது, இயேசுவின் இரத்தமானது கல்வாரியில் அதற்காக பரிகாரம் செய்ததினால், அதை சரி செய்யும் வரையிலும் அதை ஏற்றுக் கொண்டு நீங்கள் குணமடைவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

வியாதி என்பது பாவத்தின் ஒரு தன்மையாக இருக்கிறது. அது பாவத்தினால் வரக்கூடிய காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. இப்பொழுது, நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது தவறு செய்து விட்டீர்கள் என்று உங்களுக்கு தெரியவரும் பொழுது அதை நீங்கள் சரி செய்கிறீர்கள். மேடையில் அது வழக்கமான ஒரு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. அவர்களின் வாழ்க்கையில் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிக்கும் போது அதை அவர்கள் சரி

செய்யாத வரையிலும் அவர்களை குணப்படுத்த முடியாமல் போய்விடுகிறது.

பின்பு அவர்கள் தேவனுடன் அதை சரிசெய்யும் பொழுது தேவன் அவர்களை சுகப்படுத்துகிறார். நான் எதை அர்த்தப்படுத்தகிறேன் என்பதை பாருங்கள்? அவர்கள் அதை சரி செய்ய விரும்பும் பொழுது தேவன் அவர்களை குணப்படுத்துகிறார்.

இப்பொழுது நான்... அது என்னவாக இருக்கிறது.... ஆனால் நீ ஏதாவது தவறு செய்திருக்கிறாயா அல்லது இல்லையா என்பது உன் சொந்த மனதிற்கு தெரியவரும் போது எப்படியாவது அதை நீ சரி செய்வாய். இல்லையா?

8. அந்த ஊழியமானது கொடுக்கப்பட்ட போது அது சத்தியத்தைக் தோன்றச் செய்து கொண்டிருந்தது....அது உண்மை. நீங்கள் நிச்சயமாக புரிந்து கொள்ளும் விதத்தில் இப்போது மெதுவாக இதை மீண்டும் கூறுவேனாக.

இன்றிரவு சகோதரர் ஹால் [Hall] அவர்களின் பிரசங்கத்தை கேட்கவே இல்லை. நான் இப்பொழுது தான் இங்கு வந்தேன். சில நேரங்களில் நான் அங்கே நின்று கொண்டிருக்கும் போது அதன் ஒரு பாகத்தை கேட்பேன். ஜனங்களுக்கு விவரித்து சொல்ல அவர் போய்க் கொண்டிருப்பதாக அவர் என்னிடம் கூறியிருந்தார்.

அவர் (தேவன்) என்னை சந்தித்தபோது, இதை எடுத்து மக்களிடம் கொண்டு செல்வதற்கும், வியாதியாயுள்ள ஜனங்களுக்காக ஜெபிப்பதற்கும் நீ இந்த உலகில் பிறந்திருக்கிறாய் என்று என்னிடம் கூறினார். ஜனங்கள் என்னை நம்பவும், உண்மையாகவும் இருக்கும் பட்சத்தில் எந்த வியாதியும், புற்று நோயும் கூட உன் ஜெபத்திற்கு முன்பாக நிற்க முடியாது என்று கூறினார். இப்பொழுது அது உண்மையாக இருக்கிறது.

அதன் பிறகு, என்னுடன் பேசிக் கொண்டிருந்த அந்த இயற்கைக்கு மேம்பட்ட கர்த்தருடைய தூதனானவரிடம் கேள்வி கேட்டேன். அவர், தேவனுடைய சமூகத்தில் இருந்து தான் அனுப்பப்பட்டதாக என்னிடம் கூறினார். மேலும் அவர், எனக்கு உலகம் முழுவதிலும் பெரிய மக்கள் கூட்டம் இருக்கும் என்றும், இராஜாக்களுக்காகவும், மன்னர்களுக்காகவும் நீ ஜெபிப்பாய் என்றும் கூறினார். இந்த உலகத்தில் இராஜாக் களுக்காகவும் மன்னர்களுக்கும் நான் ஜெபித்துள்ளேன். அவர்கள் சொஸ்தமடைந்தனர் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. பாருங்கள்?

9. இப்பொழுது, இந்த ஏழாம் வகுப்பு படிப்பை வைத்துக் கொண்டு உள்ளூர் விளையாட்டு மைதானத்தில் காப்பாளனாக (Warden) வேலை செய்து கொண்டு சில குழந்தைகளுடன் இரண்டு அறைகள் மட்டுமே உள்ள ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தேன். எனக்கு அது கடினமாக இருந்தது. நான் எப்படி இராஜாக்களையும், மன்னர்களையும் எப்பொழுது சந்திப்பேன். கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு திசைகளில் இருந்து என்னிடம் ஜெபம் செய்து கொள்வதற்கு எப்படி வருவார்கள்? அது அந்த நேரத்தில் அதிர்ச்சியாக இருந்ததை விட, என்னுடைய விசுவாசத்தை புரிந்து கொள்ள முடிந்தது.

பிறகு அவர் என்னிடம் கூறினார். நான், "ஐயா, அவர்கள் என்னை நம்பமாட்டார்கள். ஏனென்றால் எனக்குப் பேச முடியாது." என்று கூறினேன். அது இன்னும் கூட உண்மைதான். எனக்குப் போதுமான கல்வி இல்லாததால் ஜனங்களிடம் நல்ல ஒரு உரையாடலை என்னால் பேச முடியாது. ஏனென்றால் போதுமான கல்வி என்னிடம் இல்லை. நான்... என்று கூறினேன்.

நான் தங்கியிருந்த விடுதியின் தானியங்கி (Elevator) படிக்கட்டில் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தேன். அது

நேற்று இரவு என்று நினைக்கிறேன் அங்கே ஒரு வயதான பெண்மணியிடம் நான் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தேன். ஒரு பெரிய நபர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"நீங்கள் உண்மையில் டெக்சாஸ் (Texas)-ல் இருந்து வருகிறீர்கள்" என்றார். மேலும் அவர் "உங்களுடைய பேச்சு நிச்சயமாகவே அப்படி இருக்கிறது" என்றார்.

"என்னுடைய அம்மா அங்கே இருந்தார்கள். நான் தென்பாகத்தில் இருந்து வருகிறேன்" என்றேன்.

ஆனால் என்னால் முடியவில்லை. எனக்கு பேசக்கூடிய திறமை இல்லை. சில நேரங்களில், ஊழியக் கூட்டங்களின் இரவு உணவின் போது என்னுடைய மேலாளர் மற்றும் அவர்களில் சிலர் பேசிக் கொண்டிருப்பார்கள், ஏனென்றால் அப்படிப்பட்ட படித்த மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறதைப் போல ஜனங்களிடம் புத்திசாலித்தனமான பேச்சை நான் பேச முடியாது. அதனால் தான் காரியங்களை யாராவது ஒருவர் மேடைக்கு வந்து அறிமுகப்படுத்து கிறார்கள். ஏனென்றால் என் திறமை அதற்கு போதுமானதாக இல்லை.

10. அந்த ஜனங்கள் என்னை நம்பமாட்டார்கள்... எப்படி ஒரு இராஜா அல்லது ஒரு மன்னன் அல்லது ஒரு படித்த நபர் என்னை நம்புவார்கள் என்று நான் அவரிடம் சொன்னபோது, அவர் அதை எனக்குக் கொடுப்பதாக கூறினார். உலக ஞானத்தையும், திறமைகளையும் தேடுபவர்கள் என்னைப் போல ஒரு மனிதன் பேச்சை கேட்கப் போகிறார்கள்? அப்படிச் செய்ய மாட்டார்கள் ஆகவே அவர்கள் என்னை நம்ப மாட்டார்கள் என்று கூறினேன்.

"மோசே, தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி என்பதை உறுதிப்படுத்த இரண்டு அடையாளங்கள் கொடுக்கப் பட்டன. (பார்த்தீர்களா?) அதைப்போல உனக்கு கொடுக்கப்

படும் இப்பொழுது அது ஏதோ கல்வி முறை சம்பந்தப்பட்ட ஏதோ காரியமாக அல்ல, ஆனால் இயற்கைக்கு மேம்பட்ட ஒன்றாக இருக்கும். பாருங்கள்?

முதலாவது ஜனங்களுடைய கையை பிடித்தவுடன் அவர்களுடைய வியாதியை அறிந்து கொள்வாய். பிறகு நீ அவர்களுடைய இருதயத்தில் உள்ள இரகசியங்களை அறிந்து மேலும் அவர்களுடைய வாழ்க்கையில் ஆரம்பம் முதல் முடிவு வரை நிகழ்ந்தவைகளை அவர்களிடம் கூற முடியும்"

"இதை அவர்கள் நம்புவார்கள்" என்று கூறினார்.

சரி. "நான் போகிறேன்" என்றேன்.

அவர் முதலாவதாக "நான் உன்னுடன் இருப்பேன்" என்றார்.

"நான் போகிறேன்" என்றேன். மேலும் அந்த தூதனை சுற்றிலுமாக அந்த வெளிச்சமானது இருந்துக் கொண்டிருந்தது. அந்த தூதன் அந்த வெளிச்சத்திற்குள் சென்று விட்டார்.

மேலும் அந்த அறையில் வெளிச்சமானது சுழன்று கொண்டே இருந்தது. அதன்பிறகு அறையை விட்டு வெளியே சென்று விட்டது. மேலும், அவ்வளவு தான் என்னால் கூற முடியும். எனக்கு தெரிந்ததெல்லாம் அவ்வளவுதான்.

11. ஆகவே இப்படியே நான் முன்னே சென்று கொண்டிருக்கிறேன். இப்பொழுது ஏறக்குறைய உலகம் முழுவதும் சுற்றி வந்துவிட்டேன். அந்த செய்தியை அவர் கூறியபொழுது அவர் என்னுடன் இருந்தார், அவர் என்னுடன் மேடையில் இருந்தார் அவர் மகத்தான காரியங்களை செய்திருக்கிறார்.

நான் ஜெபம் ஏறெடுத்த அனைவருமே குணமடைந்தனர் என்று நான் சொல்லவில்லை. இல்லை, இப்பொழுது அதை புரிந்துக் கொள்ள முடியாது. ஆனால் வந்திருந்த அனை

வருக்கும் அவர்களுக்கு என்ன பிரச்சனை இருந்தது, அவர்களுடைய வாழ்க்கையில் இருந்த தவறுகள் என்ன, மற்ற காரியங்கள் போன்றவைகள் பற்றி நான் அவர்களிடம் அமர்ந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கும் போது கூற முடிந்தது.

இப்பொழுது அந்த பெரிய புகார்,... அதைப்பற்றி அங்கே எந்த ஒரு கேள்வியும் இல்லை அது அறியப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் நான் கேள்விப்படும் பெரிய புகார் என்னவென்றால் போதுமான அளவு ஜனங்களிடம் நான் ஊழியம் செய்யவில்லை என்பதாக உள்ளது. ஒரு வேளை மற்றொரு பக்கம் எனக்கு அதிகமாக இருந்திருக்கும் அதனால் நான் ஒருவேளை அப்படி செய்திருக்கலாம்.

12. என்னால் ஜெபிக்க முடிந்தால் தேவன் இயற்கைக்கு மேம்பட்ட ஒரு சூழ்நிலையில் இங்கே இருந்து கொண்டிருக் கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படியாக ஏதாவது காரியங்களைச் செய்வார், பின்பு நீங்கள் நிச்சயமாகவே என் வார்த்தையை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நினைத்தேன். பாருங்கள்? நீங்கள் அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்வீர்கள். ஆகவே பிறகு அவர் அங்கே இருந்து கொண்டு, அவர் உங்களை சுகமாக்குகிறவர் என்று யார் அறிக்கை செய்கிறார்களோ அவர்களுக்கு அவர் சுகமளிப்பவராக இருக்கிறார்.

நினைவில் கொள்ளுங்கள், அவர் அதைச் செய்தார் என்று சொல்லும் வரையிலும், அவரை விசுவாசிக்கும் வரையிலும், மேலும் அதை ஏற்றுக் கொண்டு அதை சாட்சி பகரும் வரையில் அவரால் ஒருபோதும் முதலாவதாக எந்த ஒன்றையும் உங்களுக்கு செய்ய முடியாது. அது உங்களுக்கு தெரியுமா?

அவர் எதற்காக நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார்? அறிக்கை செய்வதற்காக. எபிரேயர் 3:1.

இப்பொழுது, நாம் அறிக்கையிடுதலின் பேரில் நமக்காக பரிந்து பேச அவர் பிதாவினுடைய வலது பாரிசத்தில் அமந்தவராக இருக்கிறார். பாருங்கள். நாம் அதை விசுவாசிக்க வேண்டும், ஏற்றுக் கொண்டு அதை அறிக்கை செய்ய வேண்டும். மேலும், மீட்பின் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்வதற்கும், நாம் வேண்டிக் கொள்ளும் எந்த நன்மையான காரியங்களுக்காகவும் அவர் நிச்சயமாக, பிதாவுக்கு முன்பாக இருந்து கொண்டிருக்கிறார்.

13. "நீங்கள் ஜெபம் செய்யும் பொழுது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்குக் கொடுக்கப் படும்." என்று இயேசு கூறினார். அது சரிதானே? மேலும், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீ இந்த மலையைப் பார்த்து தள்ளுண்டு போ (அல்லது பிடுங்கப்படு) உன் இருதயத்தில் சந்தேகப்படாமல் (ஆனால் இப்பொழுது கவனியுங்கள்) அந்தக் காரியங்கள் நிறைவேறும் என்று விசுவாசித்தால் அது உங்களுக்கு கிடைக்கும்" பார்த்தீர்களா? "அவர் என்ன கூறியிருந்தாரோ அதை என்னவாயினும் நீங்கள் அறிக்கை செய்ய வேண்டும்.

இன்றிரவு, நீங்கள், இருதய வியாதியினால் மரித்துக் கொண்டிருப்பீர்களானால், புற்று நோயை உடையவர்களாக இருப்பீர்களானால், நீங்கள் ஏற்றுக் கொண்ட விசுவாசத்துடன், உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசித்தால்" நான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். நான் என் முழு இருதயத்துடன் அவரை விசுவாசிக்கிறேன், மேலும் அவர் சுகமாக்குகிறவர் என்று ஏற்றுக் கொள்கிறேன், அவர் என்னை சுகமாக்குகிறவர் என்று விசுவாசிக்கிறேன் என்று கூறும்படியான ஏதோ ஒரு காரியம் நங்கூரமிடப்பட்டிருக்கும். மேலும், "நான்

குணமானேன்" என்று உங்கள் ஆத்துமாவில் இருந்து கூறுவீர்கள்.

14. பலவீனத்துடன் இருந்த அவன் "நான் பலமுள்ளவன்" என்று கூறுவான் பாருங்கள்? "நான் இப்பொழுது பலமுள்ளவனாக இருக்கிறேன். நான் இயேசுவை என்னுடைய சுகமளிப்பவராக ஏற்றுக் கொண்டுவிட்டேன்" என்று மட்டுமே கூறுவான், மேலும் அதை விசுவாசிப்பதை தவிர அங்கே எந்த ஒரு எதிர்மறையான சாட்சியமும் ஒருபோதும் இருக்காது, தேவன் உங்களை ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டவராக இருக்கிறார் அல்லது இயேசு கிறிஸ்து பிதாவினுடைய வலது பக்கத்தில் பிரதான ஆசாரியனாக உங்களை ஏற்றுக் கொள்ளவதற்காக அமர்ந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் உன்னுடைய அறிக்கையின் பேரில் உங்களை நல்லவனாக ஆக்குவதற்காக அவர் மரித்தார், அதை அவர் செய்து முடித்தார். பிதாவுக்கு முன்பாக நீங்கள் அறிக்கை செய்து கொண்டு இருக்கிறீர்கள். அங்கே தான் நீங்கள் இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

இப்பொழுது தெய்வீக சுகமளித்தல் என்பது இதை விட வெளிப்படையாக இருக்க முடியாது. அது பலவீனமான இருக்கிறது. நீங்கள் அதை செய்யுங்கள். தேவனுடைய வார்த்தையானது சாத்தானை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தோற்கடிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

15. நாசரேத்தில் இயேசு இருந்த போது பிதாவானவர் அவருக்குள் இருந்தார் என்று நான் நம்புகிறேன், அந்த மகத்தான பிதாவினுடைய எல்லாக் காரியங்களும் குமார னாகிய அவருக்கு கொடுக்கப் பட்டிருந்தது, அந்த எல்லா விதமான ஆசீர்வாதங்களும், வரங்களும் அவர் வெளிப் படுத்தப்பட்ட பிதாவின் சாயலாக இருந்தார் என்பதை உணர்த்தியது. மேலும் அவருக்குள் எல்லாவிதமான

ஐசுவரியங்களுடனும் தேவன் அவருக்குள் வாசமாக இருந்து கொண்டு, மேலே கவனித்துக் கொண்டிருந்தார்.

மேலும் நான்.... "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம். என் பிதா எனக்குள் வாசமாயிருக்கிறார்" என்று அவர் கூறினார். யெகோவா தேவன் எப்படி இருந்தாரோ அதைப் போலவே யெகோவா தேவனாக இயேசுவானவர் இருந்தார். அவருடைய சாயலை வெளிப்படுத்தினவராக இருந்தார். இங்கே அவர் தேவ சாயலாகவே இருந்தார், மேலும் தேவ னுடைய எல்லா வல்லமைகளும் சரீரப்பிரகாரமாக அவருக்குள் இருந்தது. "அந்த கிரியைகளைச் செய்வது நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற என்னுடைய பிதாவே அந்த கிரியைகளை செய்கிறார்" என்று அவர் கூறினார்.

ஆகவே, அவருடைய கட்டளையின்படி அந்த அனைத்து வரங்களையும் உடையவராக அவர் இருந்தார். ஆனால் சாத்தான் அவரைக் கண்ட போது அந்த வரங்களை அவர் பயன்படுத்தவில்லை.

"நீர் தேவனுடைய குமாரனாக இருந்தால் இந்த கற்களை அப்பமாக மாற்றும், அவைகளை அப்பங்களாக மாற்றி சாப்பிடும், ஏனென்றால் நீர் பசியுள்ளவராக இருக்கிறீர்" என்று அவன் கூறின போது, அது எழுதியிருக்கிறதே....." என்று அவர் கூறினார். மேலும் அவன் வேத வாக்கியங்களை அவரிடம் கொடுத்தான். அதற்கு "இப்படியும் எழுதியிருக்கிறதே" என்று கூறினார். மேலும் அவன் அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு சென்று இந்த உலகத்தின் இராஜ்யங்களை எல்லாம் அவருக்கு காண்பித்து "இவைகளையெல்லாம் நான் உனக்கு தருவேன்" என்று கூறினான்.

இயேசுவோ இன்னுமாக அவருடைய வல்லமையை உபயோகிக்க வில்லை. அவர் "இப்படி எழுதியிருக்கிறதே... இப்படி எழுதியிருக்கிறதே...." என்றார்.

16. இப்பொழுது, முடிக்கும் தருணத்தில் கவனமாக கவனியுங்கள், சாத்தானுடனான முதல் யுத்தத்தில் அவர் அதிகாரப்பூர்வமாக தேவனுடைய வல்லமையான வார்த்தையைக் கொண்டும், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் கொண்டும் ஜெயித்தார்.

இப்பொழுது இன்றிரவும் ஊழியக்களங்களில் எங்களுடைய சகோதரர்கள் வியாதிக்காக ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர். அதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊழியக்காரர்களாக இருக்கின்றனர்.

இங்கு உள்ள ஒவ்வொரு ஊழியக்காரரும், தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்திருக்கும் எந்த ஊழியக்காரரும் ஒரு தெய்வீக சுகமளித்தல் கூட்டத்தை துவங்க முடியும், அதற்கு உரிமை உண்டு. அது முற்றிலும் சரியாக இருக்கின்றது. அதை நடத்திச் செல்ல நீங்கள் ஏவப்படுவதாக உணர்ந்தால் போய் அதைச் செய்யுங்கள். இது அதற்கான ஒரு வழியாக இருக்கின்றது.

"சகோதரர் பிரான்காம் அவர்களே, நான் சரியாக இருக்க முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறேனா? என்று நீங்கள் கூறலாம்.

நான் சொன்னதால் நீங்கள் போக வேண்டாம், ஆனால் நான் உங்களுக்கு பொதுவான கட்டளைகளைத் தருகிறேன். இயேசுவின், கடைசி கட்டளைகள் மற்றும் தலைமையகத்திலிருந்து வந்த பொதுவான கட்டளைகள், "நீங்கள் போய் உலகமெங்கும் உள்ள சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" என்பதே. அது சரிதானே? "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன

வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்".

தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படும் ஒவ்வொருவருக்கும், தேவனால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் அவர்கள் விரும்பினால் ஒரு குணமளிக்கும் கூட்டத்தை நடத்த உரிமை உண்டு. சகோதரரே நான் உங்களை குறை கூறமாட்டேன் செல்லுங்கள்.

17. இங்கே மற்றும் அங்கே சிறிய குழுக்கள் இருப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். "நல்லது, அவர்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறினார்கள். இல்லை...இல்லை.. அவர்களில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழியில் ஜெயத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் ஒவ்வொரு நபரும் சுகமடையமுடியும், அதற்காக தேவனுக்கு மகிமை உண்டாவதாக. ஒவ்வொருவரும்....ஒவ்வொருவரும் இது ஒரு அருமையான காரியம்.

சில வருடங்களுக்கு முன்பு நான் ஆரம்பித்த போது அப்படி எதுவும் எந்த ஒன்றும் அப்படி நடக்கவில்லை. ஒரே ஒரு காரியம் என்னவென்றால் இது இயற்கைக்கு மேம் பட்டதாக நிகழ்ந்த ஒன்றாகும், ஊழியக்காரர்களை புலன் களுக்கு அப்பால் வெளியே கொண்டு சென்று அங்கே தேவன் இருப்பதை அவர்கள் காணும்படியாக செய்து அவர்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்துக் கொண்டு, ஒரு சுகமளிக்கும் கூட்டத்தை துவங்குகிறார்கள். தேவன் வியாதியஸ்தர்களை குணப்படுத்துகிறார்.

நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்....(காலி இடம்) அது மிகவும் சரியாக இருந்து கொண்டிருக்கிறது. எங்கு வேண்டுமானாலும், நீங்கள் அதை தேடிப் பாருங்கள். அதைவிட இயற்கைக்கு மேம்பட்ட ஒரு காரியம் ஏதாவது அங்கே இருக்கிறதா என்று பாருங்கள். அது சரியே.

ஆனால் தேவன் எதை செய்கின்றாரோ அது அற்புதமாக இருக்கிறது. அவர் ஆரம்பித்தார். பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலை உலகளாவிய எழுப்புதலை அவர் துவங் கினார். இப்பொழுது நாம் அதற்காக நன்றி உடையவர்களாக இருந்து கொண்டிருக்கிறோம்.

18. இப்பொழுது, வார்த்தைக்கு பின்னால் நம்பகமான, பலமடங்கு திறமையான மிகவும் தகுதிவாய்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். இங்கே ஊழியக்காரர்கள் அமர்ந்திருக் கின்றனர், அவர்களில் அநேகர் என்னை விட ஆயிரம் மடங்கு வார்த்தையை பேசக்கூடியவர்களாக இருக்கின்றனர். அது சரிதான். எனக்கு அதைப்பற்றி அவ்வளவாக தெரியாது.

எனக்கு அந்த புத்தகத்தை (வேதாகமம்) குறித்து தெரியாது அதை ஆக்கியோனைக் குறித்து நன்றாக தெரியும். ஆகவே...நான்...நான்... ஆனால் அவர்களில் அநேகர் வார்த் தையை பேசுவதற்கு அதிக தகுதியுடையவர்களாக இருக் கின்றனர்.

ஆகவே நான் அவரை நேசிக்கிறேன், மேலும் நாங்கள் அவருடன் ஒரு தனிப்பட்ட தொடர்பை மட்டுமே உடைய வர்களாக இருக்கிறோம். நல்லது, அந்த புத்தகத்தை (வேதாகமம்) என்னால் விவரிக்க முடியாவிட்டாலும், அவர் என்னுடைய அறியாமை மற்றும் படிப்பறிவு இல்லாத நிலையில் என் மீது இறங்கி வேறொரு வழியில் தன்னை வெளிப்படுத்துகிறார் பாருங்கள். அது அவர் இன்னுமாக ஜீவித்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அவர் என்னை நேசிக்கிறார், நானும் அவரை நேசிக்கிறேன். இப்பொழுதும் அவர் இன்றிரவு இங்கே இருந்து கொண்டிருக்கிறார்.

19. "சகோதரர் பிரன்காம் அவர்களே, ஜனங்கள் விசுவாசமுடையவர்களாக இருந்து கொண்டு நிறைய

பார்க்கிறார்கள்" என்று நான் நம்புகிறேன் என்று சகோதரர் ஹால் கூறினார்.

மேலும் இதை நான் தாழ்மையான இருதயத்துடன் கூறுகிறேன், ஒ தேவனே என்னுடைய ஆத்துமாவின் மேல் இரக்கம் வையும். அநேக ஜனங்கள் விசுவாசத்துடன் வந்திருக்கின்றனர்.

அவர்கள் உம்முடைய வஸ்திரத்தை சற்று தொடும் பொழுது அல்லது ஏதோ ஒரு காரியத்தை செய்வதை நான் பார்த்திருக்கிறேன் நான் அவிசுவாசிகளுடனும் மற்றும் கேலி செய்பவர்களுடனும் பேசினால் நீங்கள் அப்படித்தான் நினைப்பீர்கள். இப்பொழுது "நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று எனக்கு தெரியாது" என்று நினைக்கலாம். ஓ நானும் கூட அப்படித்தான். நிச்சயமாகவே நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று எனக்கு தெரியும்.

இப்பொழுது அது அப்படித்தான் சததமிடுகிறது எனக்கு தெரிந்தவரை அது தற்போது இருந்து கொண்டிருக்கிறது.

"ஆகவே இப்பொழுது அவர் யாரையாவது தொட வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாரா?" என்று நீங்கள் கூறலாம்.

"இல்லை சகோதரனே. அங்குதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். அது எனக்கு தூரமாக இருப்பதாக. தேவன் அதை அறிவார். மேலும் நான் போவதற்கு வேறு எந்த ஒரு இடமும் இல்லை என்பதால் இன்றிரவு கலிபோர்னியாவில் இருந்து கொண்டிருக்கவில்லை, இங்கே வேறு யாரையாவது சிலரை வைத்து கூட்டத்தைக் கூட்ட நான் முயற்சிக்கவில்லை. என் வீட்டில் ஒரு கூடாரம் இருக்கிறது. அங்கே நான் ஒரு கூட்டத்தை துவக்க போவதாக அதைச் செய்தித்தாளில் விளம்பரம் செய்தால் இப்பொழுது இங்கே கூடியிருக்கும்

கூட்டத்தை விட மூன்று மடங்கு அதிகமாக அங்கே கூடி உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் இருப்பார்கள்.

20. சில இரவுகளுக்கு முன்பு இங்கே ஒரு இரவில் இருந்தேன். அவர்களால் நகர சுற்று வட்டாரம் வரையிலும் கூட, ஜனங்களை என் சொந்த வீட்டிற்கும் கூட அழைத்துச் செல்ல முடியவில்லை. நான் ஏன் இங்கு இருக்க வேண்டும்? ஏனென்றால் தேவன் நான் இங்கு இருக்க வேண்டும் என்று விரும்புவதாக உணர்ந்தேன். அது சரியே அதனால் தான் நான் இங்கு இருக்கிறேன். மேலும் அது நான் அல்ல... நான் உரைத்த வார்த்தையை நம்முடைய பரலோகத்தின் தேவன் தாமே சத்தியம் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தினார். அதனால் நான்...

நான் கவலைப்பட ஒன்றுமே இல்லை. இன்றிரவே நான் இறக்க நேரிட்டாலும் சரி பரவாயில்லை. பாருங்கள்? நான் மரிக்க விரும்பிவில்லை. நான் என்னுடைய மனைவி, குடும்பம் மற்றும் குழந்தைகளுடன் வாழவே விரும்புகிறேன். மேலும் முடிந்தால் நான் இயேசு வரும் வரையில் தேவனுடைய பிள்ளைகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே விரும்பு கிறேன். ஆகவே நான் என் வஸ்திரத்தைத் தொடுவதற்கு யாரையும் கட்டாயப்படுத்த முயற்சிக்கவில்லை, அதனுடன் எனக்கு எதுவுமே சம்மந்தம் இல்லை. அது சரியே. ஆனால் நான் சத்தியத்தை கூறினேன் என்று விசுவாசிக்கும் ஒருவருக்கு, அந்த மனிதனுக்கு ஏதோ ஒரு காரியமாக இருக்கும். அது சரியே. அங்கே அந்த மேல் வஸ்திரத்தில் (Coat), மற்றும் அந்த வெண்கல சர்ப்பத்தில் இருந்ததை விட எந்த ஒரு அதிகமான வல்லமையும் இல்லை. ஆனால் உங்கள் விசுவாசமானது அந்த வழியில் நோக்கிப் பார்க்கும் என்றால் நீங்கள் அதைச் செய்யத்தான் வேண்டும். அது சரிதானே?

21. நேற்று இரவு நான் கூறியதைப் போல, நாசரேத்தின் இயேசுவிடம் வந்து அந்த ஸ்திரீயானவள் அவருடைய

வஸ்திரத்தைத் தொட்டாள், வல்லமையானது வெளியே புறப்பட்டு சென்றது. மற்றொருவன் அவருடைய முகத்தை ஒரு துணியால் மூடி அவர் மீது துப்பி, அவரை தலையில் அடித்து "தீர்க்கதரிசனம்" சொல்" என்றான். அங்கே வல்லமை எந்த ஒன்றும் புறப்படவில்லை.

ஒரு முறை, ஒரு மனிதன் இப்படியாக கூறினான். "ஐயா நீர் என் வீட்டிற்குள் வருவதற்கு நான் தகுதியற்றவன்". இயேசு, "நான் வந்து உன் மகனை குணமாக்குவேன்" என்று கூறினார். "ஐயா நீர் என் வீட்டிற்குள் வர நான் தகுதியற்றவன்" என்று கூறினான். மேலும் நான் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்ட மனிதனாக இருக்கிறேன். "நான் ஒரு மனிதனை போ என்றால் போகிறான் 'இதைச் செய்' என்றால் அதைச் செய்கிறான் "வா" என்றால் வருகிறான் என்று கூறினாள்.

22. இப்பொழுது பாருங்கள், நாசரேத்-ன் இயேசுவுக்கு நோய்களின் மீது அதிகாரம் இருப்பதை அந்த ரோமன் உணர்ந்தவனாக இருந்தான். மேலும் அவன் சொன்னதும் அதுவாகத்தான் இருந்தது என்பதை அறிந்து இருந்தான் பாருங்கள்? இப்பொழுது அவன் ஒரு மனிதனை நோக்கி "போ" என்றால் போகிறான், "இந்த வழியாக வா" என்றால் வருகிறான் என்று கூறினான். ஆவன் அதிகாரத்தில் இருப்பதால் அவன் அவ்வாறுதான் இருக்க வேண்டும். நான் எதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்கு தெரிகிறதா? சரி. இயேசுவுக்கு எவ்வளவாக அதிகாரம் இருந்தது, வியாதியின் மீது அதிகமான அதிகாரம் இருந்தது என்று அவனுக்கு தெரியும். அவன் "ஐயா உம்மைப் போன்ற ஒரு பரிசுத்தமான நபர் என் கூரையின் கீழ் வருவதற்கு நான் தகுதியற்றவன்" என்று கூறினான். ஆனால் அந்த அதிகாரம் எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியும். நீர் ஒரு வார்த்தை மட்டும் பேசும் அப்பொழுது என்னுடைய வேலைக்காரன் பிழைப்பான். ஒரு வார்த்தை மட்டும் பேசும் என்று கூறினான்.

மேலும் "உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கூடாது. சரி போ, உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" என்று இயேசு கூறினார். சரி,

அது...அது அவருடையதாக இருக்கிறது. அவருடைய வார்த்தையாக இருக்கிறது. மேலும் அவருடைய எழுதப்பட்ட வார்த்தையானது ஒரு வித்தாக இருக்கிறது. அதை நீங்கள் விசுவாசிக்கும் போது அது ஜீவனைப் பெற்றுக் கொள்கிறது. அதைப் அதைப் போலவே இன்றிரவும் வியாதிகள் அனைத்தின் மீதும் அதே அதிகாரம் இருந்து கொண்டிருக்கிறது, இயற்கைக்கு மேம்பட்ட நடவடிகள் உங்கள் விசுவாசத்தை மீண்டும் அவரிடமாக கொண்டு வருகிறதாக இருக்கிறது, அது அவருக்குள் விரைவாக உயிர்ப்பிக்கச் செய்கிறது. ஆனால் யவீரு தன் மகள் இறந்த போது அதை அவனால் காண முடியவில்லை. அவன் "என் மகள் இறந்து விட்டாள் ஆனாலும் நீர் வந்து அவள் மீது உமது கைகளை வைக்க வேண்டும்" என்றான். இயேசு, "நான் வார்த்தையை உரைப்பேன்" என்று கூறியிருந்தால் நிச்சயமாகவே அவர் வார்த்தையைப் பேசுவதை அவனால் காண முடிந்திருக்காது. இயேசு அவருடைய கரங்களை வைக்க வேண்டும் என்று அவன் விரும்பினான்.

ஆகவே, இயேசு அந்த மகளின் கரத்தை பிடித்தவுடன் அது அவனுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தியது அங்கே அது சரியாகி விட்டது. அது சரிதானே?

23. இப்பொழுது அநேகர்"சகோதரர் பிரன்காம் அவர்களே கர்த்தருடைய தூதன் நோயாளிகளுக்காக ஜெபிக்கும் படி உங்களிடம் கூறியிருக்கிறார். நீங்கள் எனக்காக தனிப்பட்ட முறையில் ஜெபிக்கும்படியாக விரும்புகிறேன். நான் சுகத்தைப் பெற்றுக் கொள்வேன்". என்று கூறுகின்றனர். அது சரிதான். அவர் என்னிடம் கூறியதும் அப்படித்தான்.. ஆனால் அவர் அதை வேறொரு வழியில் செய்வார் என்று எனக்கு தெரியும்.

ஆனால் இன்றிரவு, சிந்தனையை பகுத்தறியும் நேரம் இல்லாமல் இருந்தால் நான் ஜெபவரிசையை அமைக்க விரும்பினேன். மேலும் நோயாளிகளுக்காக ஜெபிக்க வேண்டும். ஓ.. அவர்களை கொண்டு வாருங்கள் வேகமாக வரிசையின் வழியாக அவர்களை அழைத்துச் சென்று வியரியஸ்தருக்காக ஜெபியுங்கள் இன்றிரவு அவர்களில் அநேகருக்கு நாம் ஜெபிக்க முடியும் என்று நம்புகிறேன்.

அதன்பிறகு, என்னுடன் சேர்ந்து இதை செய்தால், அதை நான் உங்களுக்கு செய்வேன். நான் சத்தியத்தை உங்களிடம் கூறினேன் என்று நீங்க்ள் என்னுடைய ஜெபத்தில் மீது விசுவாசம் கொள்ள நான் தேவனிடம் கேட்பேனாகில் நீங்கள் இங்கே இருந்து வெளியே செல்லும்போது "தேவனே சரியாக இப்பொழுதிலிருந்தே நான் குணமாகப் போகிறேன், அதை நான் விசுவாசிக்கப் போகிறேன்" என்று கூறுங்கள். அதை நம்புகிறீர்களா? அதை எத்தனை பேர் நம்புகிறீர்கள் என்று நான் காண விரும்புகிறேன். நல்லது, அது அருமையாக இருக்கிறது. அருமையாக இருக்கிறது.

24. எப்பொழுதும் இங்கே நான் வரும்போது ஒரு சிறிய வேத வசனத்தை வாசிப்பேன். அதன்பிறகு நாம் வியாதியஸ் தர்களுக்காக ஜெபிக்க துவங்குவோம். யோசுவா வின் புத்தகம் முதல் அதிகாரம், இரண்டாவது வசனத்தில் இருந்து துவங்குவோம்.

என் தாசனாகிய மோசே மரித்துப் போனான். இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.

நான் மோசேக்கு சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்.

வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரிய நதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்.

நீ உயிரோடிக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.

(இது முதலாவதாக எனக்கு வந்தபோது அது எதை அர்த்தப்படுத்துகிறது என்று உங்களுக்கு தெரியாது. அதுவே என்னுடைய வாழ்க்கையாக இருந்து கொண்டிருக்கிறது)

பலங்கொண்டு திடமனதாயிரு இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்.

என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு. அதை விட்டு வலது இடதுபுறம் விலாகதிருப்பாயாக.

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல் லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது நீ புத்தி மானாயும் நடந்து கொள்ளுவாய்.

நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாகதே, கலங்காதே, நீ போகும் இட மெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

[யோசுவா 1:2-9]

நான் சுகவீனமாக இருந்தபோது என் இருதயத்தில் இந்த வசனம் தான் ஒலித்துக் கொண்டிருருந்தது. நான் மனமாற்றம் அடைந்ததிலிருந்து ஏதோ சில காரியங்களை எனக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இன்றிரவும் தேவன் இங்கே இருந்து கொண்டு மகத்தான காரியங்களை செய்யப் போகிறார் என்பதை நான் என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன்.

25. நான் இன்னும் அதிகமாக தைரியத்தை பெற்றுக் கொள்ளும் ஒரு இடத்திற்கு வந்துவிட்டேன். பகுத்தறிதலின் கீழ் இருந்தாலும் சரி, சகோதரரே...நான் முன்நோக்கிச் சென்று எதிரிக்கு தைரியமாக சவால் விட விரும்புகிறேன்.

நான் ஒரு பயந்த சுபாவம் உள்ள நபர். கர்த்தருடைய ஆவியானவர் செயல்படுவதை நான் பார்க்கும் விதத்தில் மட்டுமே நான் செயல்பட முயற்சிக்கிறேன். பிறகு அதை பேசுகிறேன், அவ்வளவுதான் ஆனால் அது சரியான ஒரு விசுவாசம் அல்ல. நீங்கள் என்ன நடக்கப் போகிறது என்பதை காண்பதற்கு முன்பே நீங்கள் கூறுவதுதான் சரியானதாகும்.

இன்றிரவு நான் விசுவாசத்துடன் அடியெடுத்து வெளியில் வர விரும்புகிறேன். நான் இதற்கு முன்பு செய்திராத புதிய காரியங்களுடன் அடியெடுத்து வைக்க விரும்புகிறேன். இன்னொரு வழியை எடுத்துக் கொண்டு, "சாத்தானே இயேசு கிறிஸ்து இதைச் செய்யும்படியாக என்னை அனுப்பி யிருக்கிறார். நீ ஜனங்களை விட்டு வெளியேறத்தான் வேண்டும்" என்று கூறுங்கள். எதையும் காணாமலேயே இருதயத்தில் முழுவிசுவாசத்தையும் வைத்து துணிவுடன் கட்டளையிடுங்கள். பெரிய அடையாளங்கள், அற்புதங்களைக் கொண்டு தேவன் அதை உறுதிப்படுத்துவார் என்று நம்புகிறேன். இன்றிரவு நான் அதை சோதித்துப் பார்க்க போகிறேன். இது ஒரு புதிய இடமாக இருக்கிறது.

26. என்னுடைய வாழ்நாள் முழுவதும் அந்த வேதாகமப் பாடத்தைப் படிக்க விரும்பினேன். அது சில நேரங்களில் அது எனக்கு என்ன அர்த்தத்தை உணர்த்துகிறது என்பதை அறிந்திருந்தேன். அது தேவனாக இருந்தது ஆகவே இன்றிரவு நான் பகுத்தறிவு வேளை அல்லாமல் இந்த பக்கமாக வெளியே சென்று ஜனங்களுக்காக ஜெபித்து அவர்களை கட்டி வைத்திருக்கும் அந்த ஆவிகளை ஜனங்களை விட்டு வெளி யேற செய்யும்படியான ஒரு நேரமாக இது இருக்கிறது. அது என்னவாக இருக்கும் என்று தெரியாமல் இருக்கிறேன், ஆனால் என்னையும், அவர்களையும்கூட தேவனுடைய வாக்குத் தத்தத்தில் சரியாக அதில் நிலைத்திருக்கும்படியாக சென்று கொண்டிருக்கிறேன்.

நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தால் அவர்கள் குணமடைவார்கள் என்று அவர் என்னிடம் கூறியிருக்கிறார், நானும் அதை விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக் கிறேன். மேலும் இன்றிரவு... நான் சற்று.

சாத்தான் என்னை மிகவும் கோழையாகவே வைத்திருக் கிறான் என்று நம்புகிறேன். அது சரி. அப்படி நான் இருக்கும் படியாக அவர் அவனை அனுமதித்திருக்கிறார்.

நான் நேராக வெளியே செல்லும்படியாக தேவன் விரும்புகிறார் என்று நம்புகிறேன். நான் வெளியில் உள்ள நோயாளிகளுக்காக ஜெபிக்கச் சென்று கொண்டிருக்கிறேன். மேலும் இங்கே நின்று கொண்டு என்னால் முடிந்தவரை அநேகம் பேருக்கு ஜெபிக்கப் போகிறேன். அதுசரியே.

27. இப்பொழுது சிந்தனையைப் பகுத்தறிதல் இங்கே இருக்கிறது. தேவன் இங்கே இருந்து கொண்டிருக்கிறார். ஒரு மணிநேரத்திற்கு முன்பிருந்தே கர்த்தருடைய தூதனாவர் என்னுடன் இருந்து கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அது உண்மை என்று எனக்குத் தெரியும். பரிசுத்த

ஆவியானவரின் வல்லமையானது இப்போது என்மீது இருந்து கொண்டிருக்கிறது (அது உண்மை) கர்த்தருடைய தூதனானவர் அவர் இங்கே இருந்து கொண்டு இருக்கிறார், மேலும் அவர் இங்கே இருந்து கொண்டு எந்த ஒன்றையும் பகுத்தறிய முடியும் அது உண்மை.

அதன் பிறகு மிக அதிகமாக இருக்காது. நான் வந்து உங்களுக்காக ஜெபம் செய்ய மட்டுமே விரும்புகிறேன், ஏனென்றால் நான் வியாதியஸ்தர்களுக்காக உத்தமமாக ஜெபித்தால், அவர்கள் என்னை நம்பும்படி செய்யும்போது ஜெபத்திற்கு முன்பு எதுவுமே நிற்க முடியாது என்று அவர் என்னிடம் கூறியிருக்கிறார்.

இப்பொழுது அது ஏறக்குறைய அதை உறுதிபடுத்தும்படியான ஒரு நேரம் வந்துவிட்டது என்று நான் நம்புகிறேன். இது இரண்டு வாரங்கள் அல்லது அதற்கும் மேலாக இருந்து கொண்டு வருகிறது. அது தவறினதாக நீங்கள் ஒருபோதும் காணமுடியாது. அது ஒருபோதும் தவறுவதில்லை. ஏனென்றால் அது தேவனுடையதாக இருக்கிறது. அது சரியே.

28. இப்பொழுது என்னுடைய ஊழியமானது நோயாளிகளுக்காக ஜெபிப்பதாகும். அதற்காகத்தான் ஜெபிக்கப் போய்க் கொண்டிருக்கிறேன், ஒரே இரவில் மட்டுமே நாற்பது, ஐம்பது அல்லது அறுபது நபர்களுக்கு வரையில் இருக்கும், அதைவிட அதிகமாகவும் இருக்கலாம். ஒரே இரவில் நூறு பேர்களாகக்கூட இருக்கலாம். ஜனங்களுக்கு ஜெபிக்கவும் இங்கே நின்று கொண்டிருக்கும் தனிப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் தனியாகவும் ஜெபிக்க விரும்பு கிறேன். நான் கூறினது உண்மை என்று விசுவாசித்து அவர்கள் மகிழ்ச்சியுடன் இந்த மேடையை விட்டு வெளியே செல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது நான் பேசியதை தேவன் உறுதிபடுத்தி விட்டார். நான் கூறியதை தேவன் உறுதிபடுத்தினார் என்பதை எத்தனைபேர் விசுவாசிக்கின்றீர்கள்? அது சத்தியமாக இருக்கின்றது. நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் அதை நீங்கள் அறிந்திருந்திருக்கிறீர்கள். ஆகவே இப்பொழுது நீங்கள் அதை விசுவசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் இப்பொழுது யாராவது, "நல்லது ஆவியானவர் சகோதரர் பிரன்காம் - அவர்களை விட்டு சென்றுவிட்டார்" என்று நான் நம்புகிறேன் என்று இப்படி கூறலாம். இல்லை ஐயா, நான் என்னுடைய இருதயத்திலிருந்து மட்டுமே கூறினேன். தேவனிடத்தில் இருந்து எனக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளை உரிமை கோருவதற்கு நான் இன்னொரு பக்கமாக அடியெடுத்து வைத்து தேவனிடத்திலிருந்து அதை எடுத்துக் கொள்கிறேன்.

ஜனங்களுக்கு ஜெபிக்கும்படியாகவும் விசுவாசித்து சுகத்தைப் பெற்றக்கொள்வார்கள் என்றும் அவர் என்னிடம் கூறியிருக்கிறார். ஆகவே அதை நான் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்.

இப்பொழுது நாம் செபம் செய்வோமாக. எங்கள் பரலோகப் பிதாவே, இன்றிரவு நான் சரியாக இருக்கிறேன் என்று நம்புகிறேன். நான் அதை என்னுடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன். நீர் எனக்கு தேவை என்பதை விசுவாசிக்கிறேன். மேலும் இந்த ஜனங்கள் இங்கு அமர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள் ஜெபித்துக் கொள்ளப்படுவதற்காக இங்கு வந்திருக்கின்றனர். ஆகவே அவர்களில் அநேகர் உம்முடைய வார்த்தையைக் குறித்து நான் என்ன கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை ஏற்றுக் கொண்டனர். கடந்த சில வருடங்களுக்கு முன்பிருந்தே நான் இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்பிருந்தே அவர்கள் படுக்கையை விட்டு எழ இயலாத நிலைமையில்

முடமாக்கப்பட்டவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர். மேலும் இன்றிரவு அவர்கள் நலமுடன் மற்ற ஜனங்களைப் போல நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். உமது வார்த்தை யானது உறுதிபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பிதாவே அடையாளங்களும் அற்புதங்களும் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் அந்த ஜனங்கள் தனிப்பட்ட முறையில் என்னிடம் கேட்பதற்காக சிறிது கவலைப்படுகிறதைப் போல தெரிகிறது. நீர் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டவராகவே இருக்கிறீர். ஓ, பிதாவே நீர் இந்த ஜனங்களை இன்றிரவு குணமாக்க வேண்டுமாய் ஜெபிக்கிறேன். அதை அருள்வீராக. மேலும் உம்முடைய ஊழியக்காரனிடத்தில் பேசுவீராக.

இப்பொழுதும் தேவனே உம்முடைய சித்தத்தின்படியே நான் இதைச் செய்கிறேன் என்று இருக்குமானால் இன்றிரவு ஒவ்வொருவருக்கும் நான் ஜெபிக்கிறேன். தேவனே அநேகர் விசுவாசமில்லாதவர்களாக வந்திருக்கலாம் என்பதை அறிந் திருக்கும் நான் இன்றிரவு ஜெபிக்கின்ற எழுபது அல்லது எண்பது சதவிதத்தினர் நாளை இரவு திரும்பிவந்து அவர்களுக்கு நிகழ்ந்தவைகளுக்காகவும் கிடைத்த நன்மை களுக்காகவும் சாட்சி கூறும்படியாக நான் விசுவாசத்தில் முன்னேறிச் செல்வேனாக, தேவனே உமது சித்தத்தின் படியே நான் அசைந்து சென்று கொண்டிருக்கிறேன் என்று நம்புகிறேன். நான் இதை பார்வையாளர்கள் கேட்பதற்காகச் சொல்ல வில்லை, ஆனால் நான் உம்மிடத்தில் பேசிக் கொண்டிருக் கிறேன், பிதாவே, உம்முடைய பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தில், ஆமென்.

29. ஏசாயா எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?

இப்பொழுது என்னுடைய சிறிய பையன், ஜெப அட்டைகளை விநியோகித்துவிட்டான் என்று நினைக்கிறேன். ஜெப அட்டைகள் விநியோகிக்கப்பட்ட அவர்கள் ஒவ்வொரு வருக்காகவும் ஜெபிக்க விரும்புகிறோம், ஜெபிக்க வேண்டிய ஒவ்வொருவருக்காகவும், இப்பொழுது, தினமும் பிற்பகல் மற்றும் இரவில் அவர்களுக்கு ஜெப அட்டையை விநியோகிக்கின்றனர்.

இப்பொழுது நாம் ஒரு ஜெபவரிசையை துவங்கி சிலவற்றை மேலே கொண்டு வரலாம், சிலவற்றை சிந்தனையைப் பகுத்தறிதலின் கீழ் கொண்டு வரலாம். அது இங்கே இருந்து கொண்டிருக்கிறது. இதை நமக்குக் கொடுப்பதற்காக தேவன் இங்கே இருக்கிறார். ஆனால் அது (ஜெப அட்டை) தேவை இல்லை.

ஆனால், எத்தனை பேர்கள் இங்கே ஜெபஅட்டை வைத்திருக்கிறீர்கள், உங்கள் கரத்தை உயர்த்துங்கள்? உங்களை நான் காணட்டும் நல்லது அங்கே ஒரு குழுவே இருக்கிறது. இப்பொழுது எந்த எண்ணில் நீங்கள் துவங்குகிறீர்கள்? ஐம்பது? 51-ல் இருந்து 100 அது ஐம்பது அப்படி இருக்கலாம் அந்த எண் என்ன? அந்த எழுத்து என்னவாக இருக்கிறது? ஓ எல்லாம் சரி. அதன் பிறகும் இருக்கலாம்.

இங்கே யாராவது முந்தைய இரவு மற்றும் அதற்கு முந்தைய இரவில் ஜெப அட்டையை பெற்றுக் கொண்டவர்கள் இருக்கிறார்களா? உங்கள் கரங்களைப் பார்க்கட்டும். அங்கே ஒரு குழு இருக்கிறது. சரி.

30. ஒன்று அல்லது இரண்டு பேர் இங்கே மேடைக்கு வருவார்களாக, சற்று மேடைக்கு... அவர்கள் குணமடைந்து விட்டனர் என்று நான் கூறவில்லை. ஆனால் தேவன் இங்கே இருந்து கொண்டு அந்தக் காரியங்களை பேசிக்

கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்காக ஜெப அட்டையை கொண்டு வாருங்கள்...

இப்பொழுது உங்களுடைய ஜெப அட்டை எண் எனக்குத் தெரியாது. நீங்கள் வெளியில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு வருக்கும் ஒரு எண் இருக்கிறது உங்கள் ஜெப அட்டையின் எழுத்து "O " இருக்கிறது. மேலே கொண்டு வாருங்கள்...என்ன சொல்கிறீர்கள் 51? 63 எண் ஜெபஅட்டை யாரிடமாவது இருந்தால் அவர்களை பார்வையாளர்களிடமிருந்து அழைத்து வாருங்கள். உங்களுடைய அட்டையை திருப்பிப் பாருங்கள் இங்கே யாரிடமாவது அறுபத்தி மூன்று 63 உங்களிடம் இருக்கிறதா?

இப்பொழுது ஒரு கணம். நமது தேவன் அருகில் வர வேண்டும் என நாம் ஜெபம் செய்வோம். இன்றிரவு நான் ஒவ்வொருவருக்கும் ஜெபம் பண்ணப் போகிறேன். நான் விசுவாசிக்கிறேன். எல்லாம் சரி இப்பொழுது ஒவ்வொருவரும் பயபக்தியுடன் இருங்கள். சரி.

அது எண் 63? தானே. சற்று ஒரு கணம் இந்த சகோதரியுடன் பேசப் போகிறேன்.

31. இப்பொழுது எத்தனைபேர் நான் சொல்வதை முழுமையாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு, நான் இந்த உலகில் பிறந்தபோது வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்படியான ஒரு ஊழியத்தை எனக்கு கொடுத்தார். அதைச் செய்வதற்காகவே என்னுடைய வாழ்க்கை ஒதுக்கப்பட்டுள்ளது. எத்தனை பேர் அதைப் புரிந்து கொண்டீர்கள்?

சில வருடங்களுக்கு முன்பு கர்த்தருடைய தூதன் எனக்கு தோன்றி அதைக் குறித்து வெளிப்படுத்தி ஜனங்களுக்காக நான் ஜெபிக்க வேண்டும் என்று சொல்லும் வரை அது என்னவென்று நான் அறியாதவனாக இருந்தேன். தேவன் என்னுடைய

ஜெபத்தை கேட்கிறார் என்றும் நான் வியாதியங்தர்களுக்காக ஜெபிக்கும் படியாக அனுப்பப்பட்டிருக்கிறேன் என்றும் அவர்களை விசுவாசிக்கும்படி செய்தால், அவர்களுக்குள் இருக்கும் எந்த ஒரு வியாதியும் குணமாகிவிடும் என்று என்னிடம் கூறினார். எத்தனை பேர் இப்பொழுது அதைப்புரிந்து கொண்டீர்கள்?

பின்பு நான் அந்த தூதனிடம், "ஜனங்கள் நான் சொல்வதை நம்பமாட்டார்கள்" என்று அவரிடம் கூறினேன். நீங்கள் அதைப்புரிந்து கொண்டீர்களா? மேலும் அவர் இரண்டு அடையாளங்களை எனக்கு கொடுத்தார். ஜனங்களுக்கு முன்பாக செய்யும்படி நான் இதைச் செய்வதற்கு தேவனால் அனுப்பட்டிருக்கிறேன் என்று இதன் மூலம் நம்புவார்கள் என்று கூறினார். நான் என்ன அர்த்தத்தில் கூறுகிறேன் என்று இப்பொழுது எத்தனை பேர் அதைப் புரிந்து கொள்கிறீர்கள்? அது சரியாக இருக்கிறது.

ஆனால், சுகமாகுதலுக்கு அதனுடன் எந்த ஒரு காரியமும் இல்லை. ஓ ஒரு நபர் இங்கு வந்து மேலும் அவர் வியாதியாக இருந்தால் அவர்களிடம் என்ன தவறு இருக்கிறது என்று கூறலாம், அவர்களுடைய விசுவாசமானது கிறிஸ்துவுக்குள் நங்கூரமிடாத வரை அது அப்படித்தான் இருக்கும்... பாருங்கள்? ஆனால் இது அதை நிரூபிக்கின்றதாக இருக்கிறது.

32. இப்பொழுது, நான் எதை உணர்கிறேனோ அதையே இந்தப் பார்வையாளர்களும் உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது புனிதமான ஒன்றாக இருக்கிறது உண்மையாக இருக்கிறது. இப்பொழுது அது என்மீது ஊற்றப்படுவதை உணருகிறேன். அந்த வியாதியஸ்தர் என் அருகில் நின்று கொண்டிருக்கிறார். அவளைப் பார்த்ததே இல்லை. எனக்குத் தெரிந்தவரை, நான் உன்னை என் வாழ்க்கையில் பார்த்ததே கிடையாது. தேவனுக்கு அவளைக் குறித்து எல்லாம் தெரியும். அவருக்கு அவளைக் குறித்து

எல்லாம் தெரியும். நமது சகோதரியின் பிரச்சனை என்னவென்று அவர் எனக்கு வெளிபடுத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர் அப்படிச் செய்தால் தேவன் மகிமைப்படுவார். அவளை குணமாக்கும்படியாக நான் அவரிடம் கேட்பேன். ஆகவே அவர் அப்படிச் செய்வார் என்றால், அதற்காக நாம் தேவனுக்கு நன்றி உடையவர்களாக இருப்போம். இல்லையா? சரி.

எல்லோரும் பயபக்தியுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கூட்டத்தில் இருந்து ஒருவர் அழைக்கும் போது மற்றும் அவளை மேலே அழைக்கும் போது நீங்கள் அந்தப் பெண்மணி இங்கே இருப்பது மட்டும் உங்களுக்கு தெரியும். வெளியே அவளுடன் எந்த தொடர்பும் இருப்பதற்கு எனக்கு எந்த ஒரு வழியும் இல்லை. பரிசுத்த ஆவியான வரிடமிருந்து மட்டுமே ஏதோ ஒரு வழியில் வந்திருக்க வேண்டும்.

33. ஒரு இடத்தில் அவளைச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு செய்தால் நீங்கள் அதை செய்வீர்கள் என்றால் நான் ஆச்சரியப்படுவேன். அவள் ஒருவித பதட்டமான உணர்வுடன் இருக்கிறாள் என்பதை நான் உணர்கிறேன். ஒரு நாற்காலிகயை கொண்டுவந்து அவளை உட்கார வையுங்கள், நானும் கூட ஒன்றை கொண்டு வருகிறேன். சற்று உங்களுக்கு அருகில் அமர வையுங்கள் ஒரு கணம் சகோதரியே,

அருமை சகோதரியே இப்பொழுது இது வேறு ஏதோ நோக்கத்திற்காக என்று நீங்கள் நினைக்க நான் விரும்ப வில்லை, தேவனுடைய மகிமைக்காக மட்டுமே. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மட்டுமே இங்கே இருக்கிறார் என்பதாக அது இருக்கிறது.

இப்பொழுது பார்வையாளர்கள் ஒவ்வொருவரையும், இப்படி அமரவைத்து பேசுவதற்கு முடியுமானால்...ஆனால்

நான் சற்றே நகர்ந்து கொள்ள வேண்டும். பார்வையாளர் களிடம் இருந்து ஒரு அதிர்வு வந்து கொண்டிருக்கிறது. வியாதியின் அழுத்தம் இழுத்துக் கொண்டிருக்கிறது. அதை நான் கூறமுடியாது. மேலும் நான் அந்த பெண்ணிடம் என்ன கூறிக் கொண்டிருக்கிறேன் என்பதில் குழப்பம் அடையக்கூடும்.

அன்பான சகோதரியே, ஆனால் இப்பொழுது நான் உட்கார்ந்து உன்னிடம் பேச விரும்புகிறேன். நிச்சயமாகவே இன்றிரவு உன் ஜெப அட்டையை அழைத்தபோது நீ ஆச்சரியமடைந்திருப்பாய். (அந்த சகோதரி "இல்லை ஐயா, நான் அதற்காக ஜெபித்தேன்" என்று கூறுகிறார்). நீ அதற்காக ஜெபித்தாய் நீ ஜெபித்தாய் நீ ஆச்சரியப்படவில்லை இன்றிரவு உன்னை அழைப்பார்கள் என்று நீ விசுவாசித்தாய். நீ செய்தாயா?

இப்பொழுது நான் உன்னிடம் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருக்கும் முறையானது, கிணற்றருகே இருந்த அந்த ஸ்திரீயினிடம் இயேசு பேசியதைப் போல என்ன தவறு என்று பார்ப்பதற்கு மட்டுமே அவர் உடனே தன்னுடைய பேச்சை மாற்றிக் கொண்டார். அவர் "போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா" என்றார்.

அது சரிதானே? அதற்கு அவர்,

"எனக்கு புருஷன் இல்லை" என்றாள்.

அவளுக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள் என்று அவர் அவளிடம் கூறினார்.

அவள், "நீர் ஒரு தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்றாள்.

மேலும் நம்முடைய ஆண்டவர்,

"நான் என் பிதாவிடத்திற்கு போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான் இவைகளை பார்க்கிலும் பெரிய கிரியைகளை

செய்வான்" என்று கூறியிருக்கிறார். அதிகமான காரியங்களை செய்வீர்கள்" என்றார்.

34. இப்போது, இன்றிரவு நான் இங்கே இருப்பதின் நோக்கம், இந்த ஜனக்கூட்டத்திற்கு முன்பாக தனிப்பட்ட விதத்தில் என்னை காட்சிப் படுத்துவதற்காக அல்ல, என் பிதா அதை அறிவார். அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் கொள்வதற்கு மட்டுமே அது இருக்கிறது.

மேலும், ஒலிபெருக்கி வெளியில் வைக்கப்படாமல் இருந்திருக்கலாம். எனக்கு தெரியாது. ஆனால் இருக்கிறதா இல்லையா என்று என்னால் கூற முடியாது.

ஆனால் அவர் இங்கே இருந்து கொண்டிருக்கிறார் என்று எனக்குத் தெரியும். மேலும் அந்த இடத்தில் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது, எதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள், என்று நீங்கள் உணர்ந்து கொள்கிறீர்கள், கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் வேகமாக பேசுகின்ற காரணம், நான் உங்களிடம் பேசி முடிக்கும் வரை, அது வெளியில் பேசப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

35. சரி அம்மா, உங்களுக்கு ஒரு கடுமையான தொல்லை இருக்கிறது. சரிதானே? அது என்னவென்று மருத்துவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. மருத்துவர்களுக்கு தெரியாது... மேலும், நீங்கள் மருத்துவ வல்லுனர்களிடம் சென்று பார்த்தீர்கள் இல்லையா? அது சரிதானே? நீங்கள் பிரபலமான மனிதர்களுடன், பெரிய மனிதர்களுடன் நீங்கள் இருந்தீர்கள் நான் ஒரு பெரிய அலுவலகத்தைப் பார்க்கிறேன். சமீபத்தில் ஒரு பெரிய கட்டிடத்தில் வைத்து உங்களை பரிசோதனை செய்தார்கள் இல்லையா? அது உண்மைதானே? உனக்குள் ஒரு தொற்று அல்லது விஷம் பரவி விட்டது அது

சரியா? நமைச்சல் ஏற்பட்டு அது உங்களை நீங்கள் சுரண்டிக் கொண்டிருக்கும்படி செய்கிறது அது உண்மைதானே?

பிறகு ஏதோ சம்பவித்தது இல்லையா? சகோதரியே, நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீங்கள் சுகமாகு வதற்கு போய்க் கொண்டிருக்கிறீர்கள் கர்த்தராகிய இயேசு...?

அன்புள்ள தேவனே, நீர் இங்கே அருகில் இருந்து கொண்டிருக்கிறீர். உம்முடைய நன்மைக்கும், இரக்கத்திற்கும் நான் நன்றி கூறுகிறேன். இப்பொழுது எங்கள் சகோதரியை ஆசீர்வதியும், எங்கள் சகோதரிக்கு என்ன தொல்லை என்று மருத்துவர்களுக்கு தெரியாது, ஆனால் அதை நீர்தாமே அறிவீர். மேலும் கர்த்தாவே, நீர் உமது ஊழியக்காரர்களுக்கு எல்லாவற்றையும் வெளிப்படுத்தித் தருகின்றீர். இப்பொழுதும் கர்த்தாவே இரக்கமாயிரும். உமது அடியாரை ஆசீர்வதியும், சாத்தானே அவளை கட்டிவைத்திருக்கும் நீ இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளைவிட்டு வெளியே வா.

என்னுடைய அருமையான சகோதரியே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஆமென் நீங்கள் சுகமாகுவதற்காக சென்றுக்கொண்டிருக்கிறீர்கள், இன்றிரவு இங்கிருந்து விசுவாசத்துடன் செல்லுங்கள். மேலும் உங்கள் முழு இருதயத்தோடு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் ஜெபித்துக் கொண்டபடியே அவருடன் நெருங்கி நடந்து சென்று கொண்டிருங்கள். செல்லுங்கள், சற்றே அவருடன் நடந்து செல்லுங்கள், நடந்து செல்லுங்கள், அவரை உங்கள் முழு இருதயத்துடனும் விசுவாசியுங்கள், மறுபடியுமாக நலமுடன் உள்ள ஒரு பெண்மணியாக இருப்பீர்கள். அருமை சகோதரியே தேவன் உங்களை ஆசீர்வதிப்பீராக.

36. நான் அதை கொஞ்சம்தான் எடுத்துக் கொள்கிறேன். அதனால் இன்னொன்று கிடைக்கலாம்.... அவளுடைய எண் என்ன? 62? அவளுடைய எண்...63? எண் 80-ஐ என்னிடம்

கொண்டு வாருங்கள். ஜெப அட்டை எண் 80 யாரிடம் இருக்கிறது? O -80? ஜெப அட்டை எண் 80 யாரிடமாவது இருந்தால்? இங்கே உள்ளதா? ஜெப அட்டை எண் 80 யாரிடமும் இல்லை? ஓ... நல்லது... எல்லாம் சரி, பிறகு நீங்கள் வாருங்கள்.

இப்பொழுது எல்லோரும் பயபக்தியுடன் இருங்கள். நண்பர்களே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து அனைவரையும் குணப்படுத்துவதற்காக இங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் தயவு செய்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்... (சகோதரர் பிரன்காம் குறுக்கிடுகிறார் ஜெபஅட்டையில் அது "தோல்நோய்" என்றிருக்கிறது) அதே நேரத்தில் நம்முடைய சகோதரிகள் ("நேற்று இரவு நாங்கள் ஜெப அட்டைகளை ஒன்றையும் விடாமல் மாலை வரையில் பார்த்தோம். அது குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது என்று நினைக்கிறேன்" என்று சகோதரர் காப் (Bro.Kapp) கூறுகின்றார்).

இப்பொழுது சில நேரங்களில் ஜனங்கள் அவர்களுடைய ஜெப அட்டையில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது எந்த ஒரு காரியத்தையும் அர்த்தப்படுத்தவில்லை, அது ஒரு ஜெப அட்டை. அவளுக்கு தோலில் அரிப்பு இருந்தது. சரி. அது அவ்வளவுதான்.

37. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள். நம்முடைய ஆண்டவர் அன்பானவர் இல்லையா? நல்லது. நான் அவரை மிகவும் நேசிக்கிறேன். சகோதரியே நீங்களும் அப்படியே என்று நான் விசுவாசிக்கிறேன் இப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் இங்கு இருந்து கொண்டிருக்கிறார். மேலும், நம்முடைய ஆண்டவர் எப்பொழுதும் அன்பும் இரக்கமும் நிறைந்தவராக இருக்கிறார்.

உங்களுக்கு விசுவாசம் அதிகமாக உள்ளது, ஆனால் உங்களிடம் ஏதோ ஒரு கடுமையான தொல்லை இருந்து கொண்டிருக்கிறது சமீபத்தில் நீங்கள் மிகவும் எடை குறைந்து விட்டீர்கள் இல்லையா? அதிகமாக எடை குறைந்து விட்டீர்கள். உங்களைவிட மிகவும் பெரிய அளவில் உள்ள ஒரு பெண்ணை ஒரு தரிசனத்தில் எனக்கு முன்பாக காண்கிறேன். அது ஒரு வகையான... ஒரு நரம்பு சம்பந்தமான தொல்லையாக இருக்கிறது. அது சரிதானே? அது மட்டுமல்ல உன்னிடம் ஏதோ சிலகாரியங்கள் தவறாக இருக்கிறது. உன்னால் சாப்பிட முடியவில்லை. அது சரிதானே? சரி, சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது உங்களுக்கு போதுமானதாக இருக்கிறது. சகோதரியே குணமடைந்து விட்டீர்கள் இப்பொழுது நீங்கள் போகலாம்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் சகோதரியின் மீது இரக்கமாயிரும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவளை ஆசீர்வதிக்கும்படியாக நான் ஜெபிக்கிறேன். ஆமென்...? ...அவளுக்காக பரிந்துரை செய்வீராக...?

38. வேறு யாராவது ஒருவர் இருக்கிறீர்களா? சரி. ஒரு ஜெப அட்டையை அழையுங்கள்...பார்க்கட்டும்... அது என்ன எண் 80? அழையுங்கள் நான் பார்க்கட்டும், அடுத்தபடியாக எந்த எண்னை அழைக்க வேண்டும்? சொல்லுங்கள். எண் 90, 90-ஐ அழையுங்கள். (ஒரு சகோதரர் ஜெப அட்டை எண் 90 என்று அழைக்கிறார்). சகோதரர் ஹால் (HALL) அவர்களே, அப்படியே அந்த ஒருவரை அழையுங்கள்...

எல்லாம் சரி. ஒவ்வொருவரும் பயபக்தியுடன் இருப்பீர்களாக எண் 0-90 இங்கே இல்லை, பின்பு எண் 0.100 ஒ,எண் 0.90 இங்கே இருக்கிறது. சரி.

சகோதரியே, கீழே வாருங்கள். நல்லது நீங்கள் சமயப் பணியில் இருந்து கொண்டிருக்கிறீர்கள் அதை நான்

பாராட்டுகிறேன். நம்முடைய ஆண்டவருக்காகச் செய்யப் படுகின்ற ஒரு மகத்தான பணியாக அது இருக்கிறது. எந்த ஒரு சிலுவை வீரனையும் நான் பாராட்டுகிறேன். நான் தேவனுடைய குழந்தைகளை நேசிக்கிறேன். தேவன் தமது குழந்தைகளை நேசிக்கிறார். சகோதரியே, இப்பொழுது, இன்றிரவு நீ ஒரு தீர்க்கதரிசனத்தின் முன்பாக இருக்கிறாய் என்பது உனக்கு தெரியும். இல்லையா? இப்பொழுது அது உன் ஆவியின்மேல் இருந்துக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிகிறது. அது நம்முடைய அன்பான இயேசுவின் ஆவியைத் தவிர வேறு எதுவுமில்லை.

இப்பொழுது நீங்கள் எனக்கு அந்நியராக இருக்கிறீர்கள். எனக்கு உங்களைத் தெரியாது. உங்களைக் குறித்து எந்த ஒன்றும் எனக்குத் தெரியாது. எதையும் நான் தெரிந்து கொள்ளவதற்கான ஒரே வழி அது தேவன் மூலமைத்தான் வந்திருக்க வேண்டும். இல்லையா? மற்றபடி அதை தெரிந்து கொள்ள வேறு வழி ஏதும் இல்லை.

39. ஆனால் இப்பொழுது நம்முடன் இருக்கும் அநேக ஜனங்கள்...தேவனைக் குறித்து ஏதோ எழுதுவதைப் போலவும், படிப்பதைப் போலவும் மற்றும் ஒருவகை கணித பாடம் போன்று வார்த்தையை எடுத்து கொள்கின்றனர் என்று நான் நம்புகிறேன். ஆகவே அது வெறும் வார்த்தையாக மட்டுமே மாறிவிடுகிறது. ஆனால் அதை நாம் மனதில் அதை ஏற்றுக் கொண்டு, நம் வாழ்க்கையில் கொண்டு வருவதற்கு நாம் பயப்படுகிறோம். அதை நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? நீங்கள் செய்கிறீர்கள்?

காரணம், நான் உங்களிடம் பேசிக் கொண்டிருப்பது உங்களை கொஞ்சம் இறுக்கிப் பிடிக்கிறது,(பார்த்தீர்களா) கொஞ்சம் மன அமைதியை கெடுப்பதாக இருக்கிறது, ஏனென்றால் உங்களுடைய அழைப்பானது உங்களை இங்கே வந்து இருக்கச் செய்கிறது. ஆகவே அருகில் வரும் எவரும்

அதை உணருகிறார்கள். குறிப்பாக நான் அந்த நபரைத் தொடர்பு கொண்டிருக்கும்போது, நான் என்ன பேசுகிறேன் என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். சரி.

40. இப்பொழுது, நீங்கள் அதை சிந்திக்காமல் இருக் கலாம், அது உங்களிடம் வராமல் இருக்கலாம். அது உங்கள் மனதில் இருந்து கொண்டிருக்கவில்லை, ஆனால் அது ஏதோ தொலைவில் இருந்து உங்கள் மனதில் உள்ள ஒன்றை அல்லது சில காரியங்களை அறிந்து கொள்வதாக இருக்கிறது. தொலைவில் இருந்து மனதில் உள்ளவற்றை அறிந்துக் கொள்ளும் காரியம் (Mental Telepathy) மனதைச் செலுத்தி ஒருமுகப்படுத்துவதாகும். அது உண்மை.

ஆனால் ஒரு தீர்க்கதரிசியின் மூலம் தேவனுடைய வல்லமையானது உன் மனதில் இருக்கின்ற, உனக்குத் தெரியாத காரியங்களை அறிந்து கொள்ளும்படிச் செய்கிறது. அது சரிதானே? சரி. உன் மனதில் உள்ள நீ அறிந்து கொள்ளாத நீ நினைத்துகூட பார்க்காத சில காரியங்களை உன் விசுவாசத்தை ஊக்குவிக்கும்படியாக ஏதாவது ஒன்றை இன்றிரவு நீ அறிந்து கொள்ள தேவன் தாமே எனக்கு அருள்புரிவாராக. என் ஆத்துமாவின் நியாயாதிபதி, பரலோகத்தின் தேவனாகிய அவர் ஒருவர் மட்டுமே அறிவார். மனதில் இருக்கின்ற காரியங்களை நான் அறிந்து கொள்ளும் படியாக எந்த ஒன்றும் எனக்குத் தெரியாது. நான் காண்பது ஒரு தரிசனத்தை மட்டுமே. நான் காண்பதை மட்டுமே கூறுகிறேன். நீங்கள் சுய நினைவுடன் இருக்கின்றீர்கள், அப்படித்தானே? நான் உங் களிடம் உண்மையைக் கூறினேன் என்று நீங்கள் நம்புகிறீர்கள். இல்லையா?

41. உன்னுடைய தொல்லை உன் உடலின் கீழ்பகுதியில் இருக்கிறது. அது உன்னுடைய குடலில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அது சரிதானே? அது உன் குடல்பகுதியில் இருக்கிறது. இப்பொழுது ஒரு நிமிடம்,...நீ குழந்தையாக, ஒரு

சிறிய பெண்ணாக இருந்தபோது ஏதோ ஒரு தொல்லை இருந்தது நீ ஒரு மாதிரியான கட்டம் போட்ட உடையை அணிந்து கொண்டிருந்தாய். நீ ஒரு குழிக்குள் அல்லது ஏதோ ஒன்றுக்குள் விழுந்துவிட்டாய் அது சரிதானே? நீங்கள் விழுந்தது ஒரு கிணற்றுக்குள் என்று நான் நம்புகிறேன். அப்படி இல்லை என்றால் அல்லது அதைப்போல ஏதோ ஒன்றிற்குள் இல்லையா? உனக்கு காயம் ஏற்பட்டது. அது சரிதானே? சகோதரியே தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக நீங்கள் அதைப்பற்றி எதுவும் நினைக்கவில்லை. அது உண்மை என்றால் தேவன் அதற்கு சாட்சியாக இங்கே இருந்துக் கொண்டிருக்கிறார்.

எங்கள் பரலோகப் பிதாவே, ஏழையான இந்தச் சிறிய பெண் சிறுவயதில் காயமடைந்தவளாக இருக்கிறாள். அந்த விபத்தானது அவளது குடல்களைக் கிழித்துவிட்டது. தேவனே அவைகள் சரியாக இருக்கவில்லை. ஆனால் சர்வ வல்லமை யுள்ள தேவன், சிருஷ்டிகர் தாமே எங்கள் சகோதரியை ஆசீர்வதித்து தேவனே, அவள் இன்றிரவில் சுகத்தைப் பெற்றுக்கொள்ள அருள்புரிவராக. ஓ பிதாவே, உம்முடைய குமாரானாகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும் படியாக நான் அவளை ஆசீர்வதிக்கிறேன். ஆமென், சகோதரியே, தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்கள் முழு இருதயத்தோடும் செல்லுங்கள்.

42. இப்பொழுது நேரம் என்ன என்று நான் பார்க்கட்டும் நல்லது நாம் ஒரு ஜெபவரிசையை துவங்குவது நல்லது என்று நினைக்கிறீர்களா?

சற்று ஒரு நிமிடம் இப்பொழுது உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

"தேவனுக்கே துதி உண்டாவதாக" என்று நாம் கூறுவோமாக.

இப்பொழுது சிலர் ஜெப அட்டை இல்லாமல் இங்கே இருக்கிறார்கள். உங்களிடம் ஜெப அட்டை இல்லை. இங்கே எத்தனை பேர் சுகவீனத்துடன் ஜெபஅட்டை இல்லாமல் இருக்கிறீர்கள், உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? சரி. அங்கே உங்களில் அநேகர் இருக்கிறீர்கள். எங்கே என்று மட்டும் எனக்குத் தெரியவில்லை.

நல்லது, கீழே அந்த மூலையில் பிரதிஷ்டை செய்யுங்கள் அங்கே நீங்கள் விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள். சரி, இப்பொழுது ஒவ்வொருவரும், ஒரு கணம்.

அங்கே ஒரு பெண்மணி, வெள்ளை மேலாடை (Coat) அணிந்தவாறு அங்கே அந்த பண்புள்ள ஒரு மனிதனுக்கு அருகில் அமர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆம். சகோதரியே ஒரு நிமிடம் எழுந்து நில்லுங்கள்.

நீங்கள் உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக் கின்றீர்களா? நீங்கள் குணமடைய விரும்புகிறீர்கள். நீங்கள் அந்த கட்டி மறைந்து போக வேண்டும் என்று விரும்பு கிறீர்களா? உங்களிடம் ஜெப அட்டை இல்லை, ஆனால் இயேசு கிறிஸ்து உங்களை முற்றிலுமாக குணமாக்குகிறார் தேவன் அதிலிருந்து உங்களை முற்றிலும் குணமாக்குவார்.

43. இப்பொழுது இந்தப் பகுதியில்...உள்ளவர்கள் இந்த ஒரு வழியில் நோக்கிப் பார்த்து உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

அங்கே நகரும் படுக்கையில் (Stracher) இருந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி எப்படி இருக்கிறார்கள்? சரி. பெண்ணே. நீங்கள் இந்த வழியாக கவனிக்க வேண்டு மென்று விரும்புகிறேன், நான் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் அல்ல, அதனுடன் எனக்கு எந்த ஒன்றும் இல்லை, தேவன் தாமே அப்படி இருக்க வேண்டும் என்று இதை

ஒழுங்குபடுத்துகிறார் நீங்கள் என்னை விசுவாசிக்கிறீர்களா? என் அருமை சகோதரியே நான் உங்களை சுகப்படுத்த தகுதி இல்லாதவனாக இருக்கிறேன். இயேசு கிறிஸ்து மட்டுமே உங்களை குணமாக்க முடியும். நீங்கள் ஒரு அந்நியராக இருக்கிறீர்கள். மேலும் உங்களிடம் முற்றிலுமாக தொடர்பு இல்லை.

இப்பொழுது நீங்கள் மிகவும் மெலிந்தவராக இருப்பதைக் காண்கிறேன். ஆம், நீங்கள் வெகுநாட்களாக படுத்த படுக்கை யாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். அப்படி இல்லையா? உங்களை சுற்றிலும் ஒரு நீண்ட இருள் இருப்பதை நான் காண்கிறேன். மேலும் நீங்கள் இருதயத்தில் உள்ள தொல்லையினால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சரிதானே? அது உண்மைதானே? இப்பொழுது நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிப்பீர்கள் என்றால் உங்களுடைய விசுவாசத்தை தேவன் கனப் படுத்துவார், நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ள கொள்ள முடியும் இப்பொழுது அது வெகு தூரத்தில் இல்லை. நீங்கள் மிகவும் மோசமாக பலவீனமடைந்தவளாக இருக்கிறீர்கள் என்று நான் அறிவேன். ஆனால் நீங்கள் மட்டும் அவர் மேல் விசுவாசத்தை வைத்து உங்கள் முழு இருதயத்துடனும் நம்புவீர்கள் என்றால்.....

அங்கே அநேக ஜனங்கள் நெருக்கிக் கொண்டும் முயற்சித்துக் கொண்டும் இருக்கின்றனர். பச்சை நிற ஆடை அணிந்து இங்கே அமர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் இந்த பெண்மணி தேவனுடைய ஆவியுடன் தொடர்பு கொள்வதற்கு மிகவும் கடினமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறாள். பெண்மணியே அது உண்மைதானே? நான் சற்று உன்னுடன் பேச வேண்டும் என்பதற்காக அங்கே அமர்ந்து நீங்கள் ஜெபித்துக் கொண்டிருந்தீர்கள் அல்லது சில காரியங்களுக்காக நான் உங்கள் மனதை வாசித்துத் கொண்டிருக்கவில்லை.

ஆனால் அது உண்மை சற்றே, எழுந்து நில்லுங்கள், தெரியும். என்னை தேவனுடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறீர்கள்? நான் என்ன கூறுகிறேனோ அது தேவனிடத்தில் இருந்து வந்த சத்தியம் என்பதை விசுவசிக்கிறீர்களா? அதை நிரூபிக்கும் படியாக, உங்களுக்கு என்ன தொல்லை இருக்கிறது என்று நான் கூறுவேன் என்றால் என்னைத் தேவனுடைய தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொள்வாயா? உங்களுக்கு புற்றுநோய் இருக்கிறது. அது சரிதானே? என் சகோதரியே இயேசு கிறிஸ்து உன்னை முற்றிலுமாக குணமாக்குகிறார். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக...?

44. இப்பொழுது இந்த பக்கம் திரும்புங்கள், ஒவ்வொரு வரும் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் இருங்கள். ஜனங்கள் ஜெப அட்டை மற்றும் எதுவும் இல்லாமல் இருப்பது உங்களுக்கு தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் பாருங்கள்? சிலர் அதைப்பற்றி ஒன்றுமே அறியாமல் அல்லது தொடர்பு இல்லாமல் இங்கே திரும்பி வந்து எங்கேயாவது இருந்து கொண்டு விசுவசிக்கிறார்கள்.

இதோ, சிவப்பு மேலாடை அணிந்த ஒரு பெண்மணி என்னை பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கிறாள். சகோதரியே உங்களுடைய தொல்லை, ஆம் அது உங்கள் கண்களில் இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் பார்ப்பதற்கு வயதான பெண்மணியைப் போல் இருக்கிறீர்கள். ஆம் அது உங்கள் கண்களில் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் கண்களில் அணியும் கண்ணாடியை வைத்திருக்கிறீர்கள். பார்ப்பதற்கு உண்மையாகவே அது யாரைப் போலவோ இருக்கிறது. சகோதரியே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

45. அங்கே உங்களுக்கு அடுத்தபடியாக இருக்கும் பெண்மணியை எழுந்து நிற்க சொல்லுங்கள், அவள் எழுந்து நிற்கட்டும் காரணம் அவள் கண்ணாடி அணிந்திருக்கிறாள், ஜனங்கள் அதைப் பார்க்க வேண்டும். அது சரி, சற்று ஒரு

நிமிடம், நீங்கள் உட்கார்ந்து கொள்ளலாம். நான் தேவனுடைய தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்கள் முழு இருதயத்தோடு அதை விசுவசிக்கிறீர்களா? உங்களுக்கு சத்தியத்தை கூறினேன். என்றும் பிறந்ததிலிருந்து இங்கே வந்து, இந்த அடையாளங்களுடன் இயேசு கிறிஸ்து அவருடைய தாழ்மையான ஊழியக்காரனை ஆசீர்வதித்து நான் கூறியது சத்தியம் என்று உறுதிபடுத்திக் கொண்டிருக்கிறார். என்று விசுவசிக்கிறீர்களா? பெண்மணியே நீங்கள் அந்நியராக இருக்கிறீர்கள். நான் ஒருமுறை கூட உங்களை என் வாழ்க்கையில் பார்த்தது கிடையாது. இந்த உலகத்தில் அதற்கு எந்த ஒரு வழியும் இல்லை. நீங்கள் சற்று அங்கே அமர்ந்து கொண்டிருந்தீர்கள். ஒரு பெண்மணி உள்ளே வந்து அமர்ந்திருக்கிறார்கள். நீங்கள் உங்கள் முழு இருதயத்துடனும், இந்த ஒரு வழியில் நோக்கிப் பாருங்கள். என் சகோதரியே, தேவன் உங்களுடைய விசுவாசத்திற்கான பலனைத் தரப் போகிறார். நீங்கள் ஒரு வயிற்றுத் தொல்லையினால், வயிற்றுப் புண்களால் (Ulcerated) அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். (அது சரிதானே?) மேஜையின் மீது உள்ள உணவை நீ மறுப்பதைக் காண்கிறேன் அது சரி. நீங்கள் நல்ல சுகத்துடன் இருக்கப் போகிற ஒரு பெண்ணாக ஆகப் போகிறீர்கள். நீங்கள் வெளியெ போகலாம். மேலும் உங்களுடைய முழு இருதயத்துடன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி யுங்கள், நீங்கள் நன்றாக இருப்பீர்கள். ஒவ்வொருவரும் உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசியுங்கள், உங்களால் முடியும்... [சகோதரர் ஹால் (Bro. Hall) விசுவாசத்தைக் குறித்து பேசுகிறார். மேலும் ஜெப வரிசையை துவக்கி வைக்கிறார்.]

46. நன்றி. சகோதரர் ஹால் அவர்களே, நல்லது, அருமை நண்பர்களே. நான் திரும்பவுமாக ஒரு சிறிய பகுதியை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களோடு நான் இடைபடும் போது அபிஷேகமானது மிகவும் வல்லமையாக

இருக்கிறது. ஆகவே நெடு நேரமாக அது அந்த ஜனங்கள் மேல் இருக்கும் போது சற்று, அதை நீங்கள் உணர்ந்து கொண்டிருப் பீர்கள். அது உங்களை குதிக்கவும், இழுக்கவும் செய்கிறது.

நான் உங்களிடம் சத்தியத்தைக் கூறினேன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்கள் ஒவ்வொருவருடைய இனிய இருதயத்தையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக நான் உங்களை நேசிக்கிறேன், மேலும் உங்களுக்கு உதவி செய்வதற்காகவே இங்கே இருக்கிறேன். இப்பொழுது அவர்கள் ஜனங்களை கொண்டு வருவதைப் போல, நீங்கள் உங்களுடைய நோயாளிகளை கொண்டு வரலாம். இப் பொழுது நான் ஜெபம் ஏறெடுக்க விரும்புகிறேன். மேலும் உங்களுக்கு ஜெபம் செய்கிறேன். நீங்கள் கடந்து செல்லுங்கள். இப்பொழுது "அந்த மகத்தான வைத்தியர் அருகில் இருக்கிறார்" என்ற பாடலை இசைப் பேழையானது தொடர்ந்து இசைக்கட்டும் சரி. இப்பொழுது ஒவ்வொருவரும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

47. வாருங்கள் அம்மா, உங்கள் முழு இருதயத்துடனும் விசுவாசிக்கிறீர்களா? எங்கள் அருமையான பரலோகப் பிதாவே, உம்முடைய குமாரரானாகிய இயேசு இந்த ஸ்திரீ யானவளுக்கு சுகமளிப்பவராக இருக்கிறார் என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். மேலும் பரலோகப் பிதாவே, இன்றிரவில் தானே அவள் சுகமாக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறேன். எங்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நினைவு கூர்ந்து இந்த ஸ்திரீ சுகமாக வேண்டும் என்று என்னுடைய கைகளை அவள் மீது வைக்கிறேன். ஆமென். அம்மா, உங்களை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக எல்லாம் சரி. எல்லாம் சரி.

என்னுடைய அன்பு சகோதரியே இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்கு வார் என்று விசுவசிக்கிறீர்களா? அவர் அப்படிச் செய்வார்

என்று நம்புங்கள். மேலும் அதை அவரிடம் கேட்பேன் என்றால் அவர் உன்னிடம் கூறாமலே உன்னைக் குணமாக்கி விடுவார் இல்லையா? உன்னிடம் என்ன தொல்லை இருக்கிறது என்பது எனக்கு தெரியும் என்று நீ உணர்ந்து கொள்வாய். அப்படி இல்லையா? சரி. அந்த தொல்லை உங்களுடைய இருதயத்தில் இருக்கிறது. அது சரியாகிவிடும் நீங்கள் விசுவசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சகோதரியே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

எங்கள் பரலோகப் பிதாவே, நீர் தாமே அவளை குணமாக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன். கர்த்தாவே அவளை நலமுடன் இருக்கச் செய்வீராக இயேசுவின் நாமத்தினால் அவளை ஆசீர்வதிக்கிறேன் ஆமென் தேவனே அவளை ஆசீர்வதியும்.

48. அருமை சகோதரியே, நீங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக்கிறீர்கள் நீங்கள் அப்படி செய்கிறீர்களா? உங்களை குணமாக்க இங்கே இயேசு இருந்து கொண்டிருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? அவரிடம் நான் கேட்காமலே உன்னிடம் என்ன தொல்லை இருக்கிறது என்பதை நான் கூற வேண்டும் என்று நீ விரும்புகிறாய், நீங்கள் செய்வதை நான் அறிவேன், ஆனால் உன் விசுவாசம் அதில் இருக்கிறது, அது அப்படித்தானே? சரி நீ குணமாக வேண்டும் என்று தேவனிடம் சற்று ஜெபிக்கப் போகிறேன், நீ குணமாகிவிடுவாய் என்று நீ விசுவாசிப்பாயா?

எங்கள் பரலோகப் பிதாவே, எங்கள் சகோதரியை ஆசீர்வதிப்பீராக கர்த்தாவே. அவள் நிச்சயமாகவே சுகத்தைப் பெற்றுக் கொண்டு அப்பால் கடந்து செல்லட்டும். மேலும் அவளுடைய தலையின்மேல் என்னுடைய கரங்களை வைத்து அவளைக் கட்டி வைத்திருக்கும் அந்த பிசாசை கடிந்து கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் புற்றுநோய் என்று அழைக்கப்படும் பிசாசாகிய நீ இந்த ஸ்திரீயை விட்டு

அகன்று போ, அவளை விட்டு வெளியே வா. ஆமென், சகோதரியே, சென்று நலமுடன் இருங்கள்.

சகோதரியே எப்படி இருக்கிறீர்கள் நீங்கள் குணமாகப் போகிறீர்கள் என்று நான் கர்த்தராகிய இயேசுவிடம் கேட்பேன் என்றால், அதை முழு இருதயத்துடன் விசுவாசிப்பீர்களா?

என்னிடத்தில் அந்த சிந்தனையை பகுத்தறிதல் இருந்திருக்கக்கூடாது என்று நான் பயப்படுகிறேன்...?ஆமென். இப்பொழுது ஒவ்வொருவரும் "தேவனுக்கே மகிமை" என்று கூறுவோம்.

சகோதரியே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென். ஓ இப்பொழுது அதை செய்வதற்கு, ஏற்றுக் கொண்டு, அருகில் வந்து கடந்து செல்லும்படியாக அந்த ஒரு வழி மட்டும்தான் இருந்து கொண்டிருக்கிறது.

49. சகோதரனே, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் செய்வீர்களென்றால் அந்த மூட்டுவலியானது உங்களைவிட்டு போய் விடும். மேலும் நீங்கள் நலமுடன் உள்ள ஒரு மனிதனாக ஆகிவிடுவீர்கள். சென்று கர்த்தருக்கு துதி செலுத்துங்கள்.

சகோதரியே, இருதயத்தில் உள்ள தொல்லையானது உங்களை விட்டு அகன்றுவிடும் என்று விசுவாசிக்கிறீர்கள் அல்லவா?இப்பொழுது நீங்கள் போகலாம் நீங்கள் சுகத்தை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்று விசுவாசியுங்கள்.

சகோதரியே, நீங்களும் கூட விசுவாசிக்கிறீர்கள்தானே? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக பின்னர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சுகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் சரி. அவளுடைய பார்வையானது அவளுக்குள் திரும்பவும் வந்தது. ஒவ்வொருவரும் "தேவனுக்கு துதி உண்டாவதாக" என்று கூறுவோமாக. ஒவ்வொருவரும் எழுந்து நின்று களி கூறுங்கள். தேவன் உங்களுக்கு சுகமளிப்பவராக இருக்கிறார்

என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். தேவனுக்கு துதி உண்டாவதாக. சகோதரியே அதுதான் அந்த வழியாக இருக்கிறது ஆமென்.

ஒரு கண்பார்வையற்ற ஸ்திரீயானவள் அவளுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டு இங்கே நின்று கொண்டிருக் கிறாள். அவள் தன்னுடைய கரங்களை வெளிச்சத்தை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கிறாள். நாம் அனைவரும் நம் கரங்களை உயர்த்தி தேவனை துதிப்போம்.

பரலோகப் பிதாவே, உம்முடைய நன்மைக்காகவும் உம்முடைய கருணைக்காகவும் எவ்வளவாக பயபக்தியோடு உம்மை வணங்குகிறோம், நீரே மகத்தான வைத்தியராகவும், அற்புதமானவராகவும் இருக்கிறீர், பிதாவே நாங்கள் உம்மில் அன்பு கூறுகிறோம். உம்மை துதிக்கிறோம். இந்த ஆராதனை மூலமாக மகிமையை பெற்றுக் கொள்வீராக. உமது ஜனங்களின் மத்தியில் நீரே பெரியவராக இருக்கிறீர். எங்கள் முழு இருதயத்தோடு உம்மில் அன்பு கூறுகிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உம்மை துதிக்கிறோம்.

"தேவனுக்கு மகிமை" என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர் அங்கே அவளுடைய மகள் அவளை கட்டிபிடித்துக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறாள், அவள் குணமடைந்துவிட்டதால் தன்னுடைய கைத்தடியை சுற்றிலுமாக அசைத்துக் காண்பித்துக் கொண்டிருக்கிறாள். ஆச்சரியமான கிருபை, எவ்வளவு அற்புதமாக உள்ளது.

50. சகோதரியே, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சென்று கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சுகமாக இருங்கள். நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் சென்று மகிழ்ச்சியாக இருங்கள் ஆமென். நீங்கள் சந்தோஷமாக இல்லையா?

"ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்று வேதம் கூறுகிறது. நிச்சயமாகவே, நீங்கள் அமைதியாக இருக்க

முடியாது."அவர்கள் அமைதியாக இருப்பார்கள் என்றால் இந்த கல்லுகள் கூப்பிடும்" பல வருடங்களாக பார்வையற்றவளாக இருந்த ஒரு ஸ்திரீயானவள் அவளுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டிருக்கிறாள்.

அவர்கள் கதறி அழுது கொண்டு ஒருவருக்கொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு இங்கே அந்த மூலையில் இருக்கின்றனர். அது அற்புதமாக இருக்கிறது. அவள் கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தபோது பார்வையானது அவள் கண்களுக்குள் பறந்து வந்தது. இப்பொழுது அதே காரியமானது அவரை விசுவாசிக்கும் எல்லோருக்கும் அப்படியே இருக்கும். ஓ, எவ்வளவு அற்புதம். ஓ நான் எவ்வளவாக அவரை நேசிக்கிறேன்.

இப்பொழுது, சற்று ஒரே நேரத்தில் ஒரே கூட்டமாக இங்கு வாருங்கள். ஓ அவள் மகிழ்ச்சியாக இருக்கிறாள், அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சரி நல்லது, அவர்கள் தேவனை மகிமை படுத்துகிறார்கள் என்றால் நாமும் கூட மகிமைப்படுத்துவோம். தேவனுக்கு துதி உண்டாவதாக ஓ இயேசுவே நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மைப் போற்று கிறோம், உம்மை வணங்குகிறோம். நீர் அற்புதமானவர், மகிமை பொருந்தியவர் உம்மையே உயர்த்துகிறோம். தேவனே, இப்பொழுது மகிமையை பெற்றுக் கொள்வீராக. இதற்கு முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் இந்த நகரத்தில் அசைவு உண்டாகட்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே உம்முடைய மகிமைக்காக ஆயிரக்காணக்கானவர்களை எழுப்புவீராக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அதை அருளும் தேவனே.

51. ["இங்கே ஒரு பார்வையற்ற பெண்மணி இருந்து கொண்டிருந்தாள், இப்பொழுது அவளால் பார்க்க முடிகிறது" என்று ஒரு சகோதரன் கூறுகிறார்)

?... கொஞ்சம் ஓய்வெடுங்கள்...?

[ஒரு மனிதர், "அவர் சற்று ஓய்வெடுப்பதற்காக போய்க் கொண்டிருக்கிறார். அதன் பிறகு அவர்கள் ஜெப வரிசை வழியாக செல்வார்கள். ஆமென். சரி, இதோ இங்கே இருக்கின்ற அந்தப் பெண் சாட்சி கூற விரும்புகிறாள். மேலே வாருங்கள். அந்த வரிசையின் வழியாக வந்தபோது அவள் பார்வையற்றவளாக இருந்தாள். ஆனால் இப்பொழுது அவளால் பார்க்க முடிகிறது" என்று அந்த மனிதன் கூறுகிறார்.)

("ஓ, கர்த்தருக்கு மகிமை, ஒரு ஸ்திரீயானவள், நான் காண்கிறேன். நான் காண்கிறேன் இயேசு என்னை குணப் படுத்துகிறார். நல்லது ... ஓ மகிமை, தேவனுக்கு மகிமை. நான் இன்று காலையில் கண் விழித்த போது, நான் வெளியில் செல்லும் முன், 'நான் உன்னுடன் நடப்பேன்' என்று இயேசு கூறினார். ஓ..அவர் என்னுடன் நடந்து வருகிறார், அவர் என்னுடன் என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறார், நான்....." என்று அந்த ஸ்திரீ கூறுகிறாள்].

(ஒரு மனிதர், "அவள் இதற்கு முன்பு இருளையும் வெளிச்சத்தையும் மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது என்று என்னிடம் கூறினாள். இப்பொழுதோ நம்முடைய முகங் களையும் பலரது முகங்களையும் கூட அவளால் பார்க்க முடிகிறது" தேவனுக்கு மகிமை என்று கூறுகிறார்.)

(அவள் "தேவனுக்கு மகிமை, அல்லேலூயா. ஓ, இயேசுவுக்கு மகிமை. அவருடைய பரிசுத்த நாமம் மகிமைப் படுவதாக" என்று தொடர்ந்து தேவனை துதித்துக் கொண்டி ருக்கிறாள்.]

("அவள் இருளிலிருந்து வெளிச்சத்தை மிகவும் அரி தாகவே பார்க்க முடிந்தது என்றும் இப்பொழுது ஜனங் களுடைய முகங்களையும் பார்க்க முடிகிறது. "ஆமென்" என்று "ஆமென்" என்று ஒரு சகோதரன் கூறுகிறார். இப்பொழுது

ஒவ்வொருவரும் அசையாமல் இருப்போம் நாம் மகத்தான காரியங்களை காணப் போகிறோம். சகோதரர் பிரன்காம் இன்னும் சற்று நேரத்தில் திரும்பவுமாக வந்து கொண்டிருக்கிறார். ஆமென். நீங்கள் உட்காரலாம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார். நண்பர்களே இப்பொழுது அவர்களுக்கு அனைத்தும் தேவையாக இருக்கிறது. இப்படிபட்ட மக்கள் இந்த வரிசையின் வழியாக வந்து, தேவனை நோக்கிப் பார்த்து, அவரை விசுவாசித்து அவர்களுடைய எல்லாத் தேவைகளையும், அவர்களுடைய சுகத்தையும் இங்கே பெற்றுக் கொள்வது மட்டுமே. அவ்வளவுதான். அல்லேலூயா. ஆமென்.

[இப்பொழுது, சகோதரர் பிரன்காம் அவர்களே, மற்றொரு காரியத்தை நீங்கள் செய்ய வேண்டாம். சற்று அங்கேயே நின்று கொண்டு ஜனங்கள் இந்த வரிசையின் ஊடாக செல்லட்டும், அவர்கள் சுகமாக்கப்படுவார்கள்..."தேவனுக்கே மகிமை உண்டாவதாக"]

52. நான் உத்தமமாக இருக்க முயற்சி செய்கிறேன், அதுதான் உண்மை; நண்பர்களே ஜெபத்திற்கு முன்பாக எந்த ஒன்றும் நிற்க முடியாது என்று அவர் எனக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். இப்பொழுது எல்லோரும் பயபக்தியுடன் வாருங்கள்.

வாருங்கள் சகோதரியே, சுகம் பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். இல்லையா? நான் ஜெபம் செய்தால் நீங்கள் குணமாகி விடுவீர்கள் என்று நம்புகிறீர்களா? உங்களுக்கு என்ன தொல்லை இருக்கிறது என்று நான் உங்களிடம் கூற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். இல்லையா? உங்களுடைய இருதயத்தில் தொல்லை இருக்கிறது, அப்படி இல்லையா? இப்பொழுது நீ சென்று சுகமாகி விடுவீர்கள், அம்மா, நலமுடன் இருங்கள். எல்லாம் சரியாகி விடும்.

சகோதரனே, நீங்கள் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? போய் உங்கள் இருதய தொல்லைகள் முழுவதுமாக நீங்கி நலமுடன் உள்ள ஒரு மனிதனாக இருங்கள். இயேசு கிறிஸ்து அந்த பார்வையற்ற பெண்ணை குணமாக்கியதைப் போல, அந்த ஜனங்களும் அதே போல குணமடைந்து விட்டார்கள். அவர்கள் அதை பார்க்கிறார்கள். அவர்கள் சரியாகி விடுவார்கள். இப்பொழுது அது ஒரு சரீரப்பிரகாரமான காட்சி அல்ல. ஆனால் அது அப்படி இருக்கும். "தேவனுக்கு மகிமை" என்று கூறுவோமாக. அம்மா, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஓ, கர்த்தாவே, பரலோகத்தின் தேவனே, உம்முடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக. இப்பொழுது எங்கள் சகோதரியை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் குணப்படுத்து வீராக. அவர்கள் குணமடைவார்களாக ஆமென். அதை விசுவாசியுங்கள், சென்று சந்தோஷமாக இருங்கள். மகிழ்ச்சி யாக இருங்கள் அது சரி. ஆமென் சகோதரியே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இந்த வேளைக்காகவே நீங்கள் ஏங்கிக் கொண்டிருந்தீர்கள் அப்படித்தானே? உங்களுடைய விசுவாசம் உங்களுக்கு எல்லாவற்றையும் செய்தது, சகோதரியே, சென்று நல்ல சுகமுடன் இருப்பீர்களாக.

"தேவனுக்கு மகிமை" என்று கூறுவோமாக. நீங்கள்அதை விசுவாசிக்கிறீர்களா? சென்று மகிழ்ச்சியாக இருங்கள். மேலும் கீழுமாய் குதித்துக் கொண்டு "தேவனுக்கு மகிமை" என்று கூறிக் கொண்டிருங்கள். மூட்டு வலியிலிருந்தும், முதுகு தண்டு சம்பந்தமான வியாதியில் இருந்தும் தேவன் அவரை விடுவித்துக் கொண்டிருக்கிறார்.

நீங்களும் கூட விசுவாசிக்கிறீர்கள் இல்லையா சகோதரி? உங்களுக்கு இருக்கும் அந்த மூட்டுவலி வியாதியிலிருந்து முழுவதும் குணமடைய வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படித்தானே? சரி. சற்று கைளை மேலே உயர்த்துங்கள். காலில் உள்ள தூசியை துடைத்து விட்டு மேலும் கீழுமாக

இப்படி செய்யுங்கள். நீங்கள் மேடையை விட்டு செல்லுங்கள் இப்பொழுது நீங்கள் விடுதலையாகி விட்டீர்கள்.

"தேவனுக்கே துதி உண்டாவதாக' என்று கூறுவோமாக. பாருங்கள். இந்த ஸ்திரீயை முன்பு நான் பார்த்த போது அவள் அப்படியேதான் இருந்தாள். அந்த காரியங்கள் எல்லாம் கூட குணமாகி விட்டது. உங்களுக்கு மூட்டுவலி இருந்தது இல்லையா?. உங்கள் கரங்களை மேலே உயர்த்துங்கள். மேலும் கீழுமாக காலால் தட்டி நடவுங்கள். நீங்கள் ஜெபத்தை பெற்றுக் கொண்டதற்கு இப்பொழுதே உரிமை கோருங்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் நீங்கள் இப்பொழுது சுயாதீனமாக இருக்கிறீர்கள். களிகூர்ந்து கொண்டே மேடையை விட்டுச் செல்லுங்கள். சென்று கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் குணமாகுங்கள்.

அற்புதம் அது இங்கே இருந்து கொண்டிருக்கிறது. அது தான் இது ஆமென். இதற்காகத்தான் நாங்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

53. சகோதரியே விசுவாசியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் சுகத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கரங்களை மேலே உயர்த்துங்கள். அது சரியே. ஆமென். மகிழ்ச்சியுடன் மேடையை விட்டுச் செல்லுங் கள். விசுவாசிக்கிறீர்களா?

சகோதரியே சுகமாகுங்கள். நீங்கள் உங்கள் சுகமாகுதலுக் காக நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஆமென் உங்களுக்கு நிறைய சிக்கலான காரியங்கள் இருக்கிறது. மேலும் மூட்டுவலியும் இருக்கிறது. இல்லையா? உங்கள் கரங்களை உயர்த்துங்கள். நீங்கள் நீங்கள் சுகமாகி விட்டீர்கள். ஆமென். உங்கள் பாதத்தைக் கொண்டு மேலும் கீழுமாக நடந்து செல்லுங்கள். அது சரியே. சந்தோஷமாக மேடையை விட்டுச் செல்லுங்கள் ஆமென். சகோதரியே, நீங்கள்

விசுவாசிக்கிறீர்களா? அந்த இருதயப் பிரச்சனையில் இருந்து முழுவதுமாக விடுபட விரும்புகிறீர்கள் இல்லையா? இயேசுவின் நாமத்தில் அது உங்களை விட்டு கடந்து போவதாக. அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டே செல்லுங்கள்.

இந்த சிறிய குழந்தைக்காக உங்கள் முழு இருதயத்துடனும் விசுவாசிக்கிறீர்களா? அது போய் விடும் என்று விசுவாசிப்பீர் களா? இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அதனுடைய சுகமாகுதலுக்காக இந்த குழந்தையை ஆசீர்வதிக்கிறேன். ஆமென். நீங்கள் சென்று இன்றிரவு ஒரு கயிறை அதனுடன் வைத்து அதை அளந்து கொள்ளுங்கள், நாளை இரவு சுருங்கிப் போய்விட்ட அதன் பகுதி கயிறை அவிழ்த்து என்னிடம் கொண்டு வா. சகோதரனே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆமென். "கர்த்தரை துதிப்போம்" என்று கூறுவோமாக. எது வேண்டுமானாலும் நிகழலாம். தேவசிந்தையில் இருங்கள். நான் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. ஆனால் யாரை நான் விசுவாசிக்கிறேன் என்று எனக்குத் தெரியும். உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசியுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுடைய காது கேட்குதலைப் பெற்றுக் கொள்ளுங்கள். சந்தோஷத்துடன் மேடையை விட்டுச் செல்லுங்கள்.

தேவன் உங்களை சுகமாக்குவார் என்று உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக்கிறீர்களா? ஓ பரலோகப் பிதாவே, இந்த பிசாசை இந்தப் பெண்ணிடம் இருந்து அகன்று செல்லும்படி வேண்டுமாய் நான் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் இந்தப் பெண்ணை விட்டு வெளியே வா. ஸ்திரியே கவனிக்கிறீர்களா? நீங்கள் நீண்ட நாட்களாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் இல்லையா? மன ரீதியான, பதட்டம், நரம்பு தளர்ச்சி... சரியா? பேய்கள் உங்களை வேட்டையாடிக்

கொண்டிருக்கிறது. உங்களை, பயமுறுத்துகிறது இல்லையா? நீங்கள் என்னை தேவனுடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக் கிறீர்களா? உங்களுடைய கரங்களை உயர்த்தி "என்னுடைய சுகமளித்தலுக்காக தேவனுக்கு நன்றி" என்று கூறுங்கள். அதைப்பற்றிய எல்லாவற்றையும் மறந்து விட்டு மேடையை விட்டுச் சென்று சுகமாயிருங்கள் ஆமென்.

54. சரி. சகோதரியே. உங்கள் விசுவாசிக்கின்றீர்களா? முழு இருதயத்துடன் இங்கே பாருங்கள். நீங்கள் பதட்டமாக இருக்கிறீர்கள்...ஆகவே அதற்கு ஒரு தீர்வை பெற்றுக் கொள்ள நினைக்கிறீர்கள். உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக்கிறீர்களா? இதைச் செய்வதற்காக தேவன் என்னை அனுப்பியுள்ளார் என்று விசுவாசிக்கிறீர்களா? என் வாழ்க்கையில் ஒரு போதும் உங்களை நான் பார்த்ததில்லை. எனக்கு தெரிந்த வரை, நீங்கள் ஒரு அன்னியராக இருக்கிறீர்கள். அது சரியா? ஜனங்கள் பரிசுத்த ஆவியை அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். வேறு விஷயமில்லை...நான் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்க வில்லை, ஆனால் அது நான் அல்ல. பரிசுத்த ஆவியானவரே இங்கே இருந்து கொண்டிருக்கிறார். அதை நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? புற்று நோயிலிருந்து நீங்கள் சுகமாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள், இல்லையா? மேடையை விட்டுச் சென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நலமுடன் இருங்கள் ஆமென்.

"தேவனுக்கு துதி உண்டாவதாக" என்று கூறுவோமாக. ஓ... நான் நமக்கு என்ன தேவை என்றால் இதுதான் இதுவே அந்த வேளையாக இருக்கிறது.

இவர்தான் அந்த நோயாளியா? சகோதரியே எப்படி இருக்கிறீர்கள். பார்ப்பதற்கு நீங்கள் வேதனையோடு இருக் கிறீர்கள். என்னை தேவனுடைய ஊழியக்காரன் என்று விசு வாசிக்கிறீர்களா? இப்பொழுது தேவனுடைய ஆவியானவர்

கொண்டிருக்கிறார் என்றும், நான் உங்களை தொடுவேன் என்றால் நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இங்கே இருந்து விசுவாசிக்கிறீர்களா? சகோதரியே, நீங்கள் ஒரு மோசமாக ஆழமாக சிந்திக்கக் கூடிய நபாராக இருக்கிறீர்கள். இல்லையா?

கூடவே ஒரு சோர்வின் ஆவியும் உங்களிடத்தில் இருக்கிறது. எப்பொழுதும் தேவையற்றக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவித பதட்டத்துடன் வருத்தப்படுகிறீர்கள் காரணம் மூட்டுவலிக்காக உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு அமிலமானது உங்களுடைய இரத்தத்தில் இருக்கிறது. அது சரிதானே? இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மேடையை விட்டுச் சென்று நலமுடன் இருங்கள். "தேவனுக்கே துதி உண்டாவதாக" என்று கூறுவோமாக. சகோதரனே, விசுவாசியுங்கள். உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக்கிறீர்களா? பரலோகப் பிதாவே, இந்த சகோதரனை ஆசீர்வதித்து அவரைக் குணமாக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உம்மிடம் ஜெபிக்கிறேன். என் சகோதரனே விசுவாசித்துக் கொண்டே சென்று கொண்டிருங்கள் நலமுடன் இருங்கள்.

சகோதரனே நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? என்னுடைய கரத்தைப் பிடித்திருக்கிறீர்கள். ஆம் ஐயா, உங்களிடம் என்ன தவறு என்று நான் அறிவேன் உங்களுக்கு புற்றுநோய் உள்ளது மேடையை விட்டுச் சென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சுகமாக இருங்கள்.

"தேவனுக்கே துதி உண்டாகட்டும்" என்று கூறுவோம். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா?

55. சற்று ஒரு கணம் இப்பொழுது இங்கே இருக்கும் சிலரிடம் ஜெப அட்டைகள் இல்லை. ஜெப அட்டையை பெற்றுக் கொள்ளவில்லை. ஜெப அட்டையுடன் அதற்கு எந்த

ஒரு காரியமும் இல்லை. இப்பொழுது குணமடைய வேண்டிய நேரம் இது. நினைவில் கொள்ளுங்கள், கர்த்தருடைய பிரசன்னம் சுகப்படுத்துவதற்காக அருகில் இருந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? பார்வையாளர்களே இந்த வழியாக நோக்கிப் பாருங்கள். நான் உங்களிடம் கூறியவை சத்தியம் என்பதை இந்த வழியில் பார்த்து விசுவாசியுங்கள். நீங்கள் தேவனுடைய மகிமையை காண்பீர்கள்.

அங்கே அமர்ந்து கொண்டிருக்கும் பெண்மணியே, நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள். நீங்கள் என்னை விசுவாசிக்கிறீர்களா? சற்று ஒரு நிமிடம் எழுந்து நில்லுங்கள். நீங்கள் அந்த இழுப்பின் மேல் இருப்பீர்கள். நீங்கள் ஒரு அந்நியர் அல்லவா? உங்களிடம் ஜெப அட்டை மற்றும் எந்த ஒன்றும் இல்லை. நீங்கள் நடந்து வந்து இந்த கூட்டத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அது சரியா? இதற்கு முன்பு அநேக வருத்தங்கள், தொல்லைகளுடன், நீங்கள் ஒரு மோசமான வாழ்க்கையில் இருந்தீர்கள். சமீபத்தில் இங்கே படித்துக் கொண்டிருந்தீர்கள். அது சரியா? சரியே. மேலும் இப்பொழுது புற்று நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியா? இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வீட்டிற்கு சென்று குணமடையுங்கள். ஆமென் அல்லேலூயா.. சரி தான்.

அங்கே கட்டிலின் மேலே படுத்துக் கொண்டிருக்கும் ஊனமுற்றவரின் நிலை எப்படி உள்ளது? அந்த கைகளுக்கு நடுவே நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் ஒரு நிமிடம் சகோதரனே. அந்தப் பெண்மணி அவளுடைய கரங்களுடன் கட்டிலின் மேலே கட்டப்பட்டவளாக படுத்துக் கொண்டிருக்கிறாள். பெண்மணியே, இந்த வழியாக பாருங்கள். உங்கள் முழு இருதயத்துடன் விசுவாசிக்கறீர்களா? தேவன் என்னை இங்கே அனுப்பியுள்ளார் என்று விசுவசிக்கிறீர்களா உங்களிடம்

ஜெப அட்டை இல்லை தானே? ஜெப அட்டை, மற்ற எந்த ஒன்றும் இல்லை.. நாம் அந்நியர்கள் அது சரி தானே?

உங்களைப்பற்றி எந்த ஒன்றையும் அறிந்து கொள்வதற்கு இந்த உலகில் எனக்கு எந்த ஒரு வழியும் இல்லை. அது தேவனிடமிருந்து வந்திருந்தால் ஒழிய. அது சரிதானே? நான் உங்களை குணப்படுத்த முடியாது. நான் என்ன பேசிக் கொண்டிருக்கிறேன், என்னிடம் என்ன கூறப்படுகிறது என்று நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அதை விசுவசிக்கிறீர்களா? சரி. நீங்கள் மரித்துப்போகும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? உங்களுக்கு ஒரு பயங்கரமான கட்டி இருக்கிறது. அது சரி தானே? நீங்கள் உங்கள் காலில் எழுந்து நின்று உங்களுடைய சுகமாகுதலைப் பெற்றுக் கொள்வீர்களா? அந்த நிலையிலிருந்து வெளியே வாருங்கள்.

நீங்கள் நீண்ட நாட்களாக படுக்கையில் இருந்து வருகிறீர்கள். எழும்பி நிற்க அவளுடைய நண்பர்கள் அவளுக்கு உதவி புரியட்டும். அவள் பலத்தை பெற்றுக் கொள்ளும் வரையில் அவளை காலில் நிற்க வையுங்கள். அவளால் வீட்டிற்கு நடந்த செல்ல முடியும் ஏற்றுக் கொள்ளுங்கள்....பார்வையாளர்கள்...ஆமென். அவள் அதை ஏற்றுக் கொண்டாள்.

56. ஒரு மனிதன் அந்த வாசலின் அருகே உட்கார்ந்து கொண்டு நேராக என்னை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கிறார். உங்களிடம் ஜெப அட்டை இல்லாமல் இருக்க வேண்டும் அப்படிதானே ஐயா? ஒரு சிறிய நபர்.... சொல்லுங்கள், உங்களிடம் ஏதோ வித்தியாசத்தை நான் காண்கிறேன். அது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கும் பெண்ணாக இருக்கலாம். ஒரு நிமிடம் பொறுங்கள். நீங்கள் விரும்பினால் ஒவ்வொருவரும் பயபக்தியுடன் இருங்கள். இப்பொழுது அங்கே ஒரு இழுப்பு இருந்து கொண்டிருக்கிறது. ஆமாம்...

இந்த வழியில் ஒரு சிறிய பகுதி முழுவதும் பெண்மணிகள் இருக்கிறார்கள், ஒரு நிமிடம் நான் அந்த மனிதனைப் பார்க்கட்டும். ஐயா, நீங்கள் முடமாக இருக்கிறீர்கள். நீங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்ள்.

நல்லது, நீங்கள் ஒரு ஊனமுற்ற நபராக இருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் ஊனமுற்றவராக இருக்கிறீர்கள். நீங்கள் - நீங்கள் ஒரு...நான் காணட்டும், நான்....உங்கள் முதுகு தண்டில் ஒரு வகையான தொல்லை இருப்பதனால் நீங்கள் முடமாக ஆகிவிட்டீர்கள். அது சரிதானே? அது சரி. அது ஏதோ முதுகுதண்டில் உள்ள பக்கவாதமாக இருக்கிறது. அது சரிதானே? அது உண்மை தானே? நீங்கள் எழுந்து நின்று ஏன் இயேசு கிறிஸ்துவை....உங்களுடைய....அவர் அங்கேயே குணமடைந்து விட்டார். இயேசு கிறிஸ்துவுக்கே துதி உண்டாவதாக.

பார்வையாளர்கள் எல்லோரும் கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைப்பார்களாக, மேலும் இப்பொழுதே குணமடைவர்களாக. நாம் ஒவ்வொருவரும் நம் கரங்களை உயர்த்தி தேவனுக்கு துதி செலுத்துவோம்.

பரலோகப் பிதாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் உம்மை நேசிக்கின்றோம், ஜெபிக்கிறோம், தேவனே, இப்பொழுதே, இந்த கட்டிடத்தில் உள்ள ஒவ்வொருவரையும் சாத்தானிடமிருந்து விடுவிப்பீராக அவர்கள் குணமடைவார் களாக....